# கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசன பிரிவு

# 2025

தொகுதி - III

## வருடாந்த செயற்திறன் அறிக்கை

# தலைப்பு - 118

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசன பிரிவு

# 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## உள்ளடக்கம்

## செலவினத் தலைப்பு இல 118

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு - நீர்ப்பாசன பிரிவு


| | | |
|---|---|---|
| அத்தியாயம் 01 | நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு | 01 |
| அத்தியாயம் 02 | முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் | 07 |
| அத்தியாயம் 03 | வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 93 |
| அத்தியாயம் 04 | செயலாற்றுகை சுட்டிகள் | 99 |
| அத்தியாயம் 05 | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 100 |
| அத்தியாயம் 06 | மனித வள விபரம் | 105 |
| அத்தியாயம் 07 | இணக்க அறிக்கை | 107 |


**பின்னிணைப்பு**


| | |
|---|---|
| பின்னிணைப்பு i | : நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் |
| பின்னிணைப்பு ii | : செயற்படும் நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் |
| பின்னிணைப்பு iii | : Indicator 6.5.1 score |
| பின்னிணைப்பு iv | : கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (நீர்ப்பாசனப் அமைச்சு) |

# 01 அத்தியாயம் - நிறுவன ரீதியான தோற்ற வடிவம் / செயற்படுத்துகை சுருக்கம்

## 1.1. அறிமுகம்

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, 2024 நவம்பர் மாதம் 25 ஆந் திகதிய, இலக்கம் 2412/08 ஐ உடைய அதி விசேட வர்த்தமானியின் ஊடாக திருத்தப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டது.

அதன் பிரகாரம், அமைச்சின் பிரதான 4 அலகுகளான விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன பிரிவுகளில் ஒரு அலகாக நீர்ப்பாசனப் பிரிவு இலங்கையின் நீர் வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக மிக முக்கியமான பங்கை வகித்து வருகின்றது.

நாட்டின் விவசாய மேம்பாட்டுக்கு பங்களிப்பு செய்த வண்ணம், விவசாயக் குடிமக்களினது வாழ்க்கை நிலைகளை மேலுயர்த்துவதும், அதனைத்தாண்டிய வண்ணம் குடிநீர், தொழிற் துறை மற்றும் மின் உற்பத்தி போன்ற பன்முக நோக்கங்களின் கீழ் நீர் வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் போன்ற நடவடிக்கைகளும் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனடிப்படையில், நடுத்தர மற்றும் பாரியளவிலான நீர்ப்பாசனப் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ அணுகு முறையின் ஊடாக விவசாய சமூகத்தை வலுப்படுத்துவதும், நீர்வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக அதன் அளவியல் ரீதியிலான மற்றும் தராதர நிலைகளை பேணிப் பாதுகாத்த வண்ணம் தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்ற செயற்பணிகளும் இப் பிரிவின் கீழான பணிகளாகக் காணப்படுகின்றன.

## 1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, குறிக்கோள்கள், பணிக்கூற்று

### 1.2.1. தூரநோக்கு

“வினைத்திறனான நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் செழிப்பான இலங்கையை உருவாக்குதல்"

### 1.2.2. பணிக்கூற்று

நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் பல் நோக்குத் தேவைகளை நிவர்த்தி செய்த வண்ணம் குடிகளினதும், சூழலினதும் நிலைப்பாட்டை உறுதி செய்தல்

### 1.2.3. குறிக்கோள்கள்

i. நாட்டின் அனைத்து வகையான நீர்ப் பயன்பாடு மற்றும் வலுச் சக்தி தோற்றுவாய்க்குத் தேவையான நீர் வளத்தை விருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்துதல்.

ii. காணி மற்றும் நீர் பயன்பாட்டை மேம்படுத்துதல்.

iii. ஆற்றுப் படுக்கைகளையும், நீர்த் தோற்றுவாய்களையும் பாதுகாப்பதன் மூலம் நீரின் தரத் தன்மையையும், பேண் தகு நிலையையும் பாதுகாத்தல்.

iv. இலங்கயின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு தேவையான பாசன நீர் மற்றும் விவசாயஞ் சார் மதியுறை சேவை வசதிகளை வழங்குதல்.

v. இலங்கையர் அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு மிக்க குடியியல் நீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் தேவையான வசதிகளை வழங்குதல்.

vi. சுற்றுச் சூழல் சம நிலைக்கும், மேம்பாட்டுக்கும் தேவையான நீர் வசதிகளை வழங்குதல்.

vii. நீர்ப்பாசனத் தொகுதிகளுடன் தொடர்புடைய விவசாயக் குடி மக்களினது வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதன் ஊடாக விவசாயத் துறையின் பேண்தகு நிலையை உறுதிப்படுத்துதல்.

viii. கைத்தொழில் துறை, சுற்றுலாத்துறை போன்ற சேவை பிரிவுகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்தல்.

ix. இலங்கையில் நிலக் கீழ் நீர் வளங்கள் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்.

x. மகாவலி விசேட பொருளாதார ஆளுகைப் பிரதேசத்தின் ஊடாக தேசிய உணவுற்பத்தி செயற்பாடு தொடர்பில் முனைப்பழிப்புள்ள பங்களிப்பை வழங்குதல்.

## 1.3. பிரதான செயற்பாடுகள்

i. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களின் விடயப் பரப்புகளுடன் தொடர்புடைய கொள்கை உறுவாக்கம், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

ii. அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகின்ற பொது மக்களுக்கான சேவைகளை வினைத் திறன் மிக்கதாகவும், பொது மக்களது பங்களிப்புடனும் பெற்றுக் கொடுத்தல்.

iii. அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகின்ற பொது மக்களுக்கான சேவைகளை வினைத் திறன் மிக்கதாகவும், பொது மக்களது பங்களிப்புடனும் பெற்றுக் கொடுத்தல்.

iv. நீர் வளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளின் விருத்தி

v. முன்னெடுப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளும் உள்ளடங்களாக நீர்ப்பாசனத் தொகுதிகளையும், ஆற்றுப் படுக்கைகளையும் பாதுகாத்தல்.

vi. அணைக்கட்டுப் பாதுகாப்பு நெறி முறைகளை உறுவமைத்தல்.

vii. நீர்த் தோற்றுவாய்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை பேணுதல் மற்றும் பாதுகாத்தல்

viii. அணைக்கட்டுப் பாதுகாப்பு நெறி முறைகளை உறுவமைத்தல்.

ix. பல் வகை தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான போதியளவான நீரை ஒதுக்கிடும் பொருட்டு தொழில்நுட்ப வழிகாட்டலையும், அளவுகோல்களையும் தயாரித்தல்.

x. நீர்த் தோற்றுவாய்கள் மற்றும் தொடர்புடைய சுற்றாடல் மாசாக்கத்தை தடுப்பதற்கும், நீரின் தர நிலையை உறுதிப்படுத்தும் பொருட்டும் உபாய வழி நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்.

xi. நிலத்தினுள் உவர் நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்

xii. கழிவு நீர் மற்றும் வெள்ளப் பெருக்கு பாதுகாப்பு

xiii. பொறியியல் சார் மதியுறை சேவைகளை வழங்குதல்.

xiv. அரச பிரிவிற்குறிய பிரதானமான நிர்மாணிப்பு சேவை வழங்குநராக தராதர மிக்க நிர்மாணிப்புப் பணிகளில் ஈடுபடுதல்.

xv. நீர்ப்பாசனத் தொகுதிகளின் நிறுவன ரீதியான அபிவிருத்தி மற்றும் வினைத் திறனை மேம்படுத்துகை.

xvi. நிலக் கீழ் நீர் மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம்.

xvii. மழை நீர் சேகரிப்பு மழை நீர் சேகரிப்பை விருத்தி செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

xviii. தேசிய மின் வழங்கல் செயற்பாட்டின் பிரதானமான புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி வழங்குநராக மகாவலி நீர்த்தேக்கத் தொகுதிகளை முகாமைத்துவப்படுத்துதல்.

## 1.4. நிறுவன விளக்கப்படம்

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு – நீர்ப்பாசன பிரிவு**



## 1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

- நீர்ப்பாசன திணைக்களம்

## 1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியங்கள்

- இலங்கை மகாவலி அதிகார சபை (MASL)
- நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு (IMD)
- மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB)
- இலங்கை பொறியியல் பேரவை (CESL)
- மகாவலி மதியுறை பணியகம் (MCB)

## 1.7. வெளி நாட்டு நிதியங்கள் பெறப்படுகின்ற கருத்திட்டங்களின் தகவல்கள்

| அ) கருத்திட்டத்தின் பெயர் | ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம் (ரூபா. மில்லியன்) | ஈ) கருத்திட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சி (MWSIP) | ADB / GoSL | 160,950.00<br>USD 536.50 Mn<br>(Revised)<br>(USD1 = ரூபா. 300) | Stage I<br>2015 – 2025<br>Stage II<br>2026 - 2030 |
| உமா ஒய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம் | EDB of Iran / GoSL | 99,100.00 (Revised)<br>USD 514.06 Mn<br>(Headworks - ரூபா. 89,748.00 மில்லியன்)<br>(USD 50 Mn - EDB of Iran) | 2010 - 2026 |
| மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்க கருத்திட்டம் | CDB, SFD, KFAED, OFID, GoSL | 120,700.00<br>(USD 770.41 Mn) | 2007 - 2025 |
| கால நிலை தாக்கங்களை தணிக்கும் பல கட்ட நிகழ்ச்சித் திட்டம் (CResMPA) | WB, IBRD | 15,567.00<br>(USD 76 Mn) | 2021 - 2026 |
| ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP) | WB | 20,308.70<br>(USD - 70.03 Mn) | 2021 - 2027 |
| நீர் முகாமைத்துவத்துக்கான ஒருங்கிணைந்த பிரவேசிப்பின் ஊடாக கால நிலை ஏற்றத் தாழ்வுகளை முகாமைத்துவப்படுத்துதல் (வெவ்கம் புபுதுவ - CRIWMP) | Green Climate Fund & GoSL | 12,940.00<br>USD 52.08 Mn<br>(USD 1 = ரூ. 250) | 2017 - 2025 |
| இலங்கையில் நகல்ஸ் மலைத் தொடரின் நீரேந்து பிரதேசத்தில் அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய ஆற்றுப் படுக்கைகளில், | பசுமைக் காலநிலை நிதியம் /இலங்கை அரசு | 14,710.00<br>(USD 48.975 Mn) | 2023 - 2029 |

| அ) கருத்திட்டத்தின் பெயர் | ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் | இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம் (ரூபா. மில்லியன்) | ஈ) கருத்திட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் தாழ் ஆற்றுப் படுக்கைகளில் குடியேறியுள்ள விவசாயிகளினதும், விவசாயக் குடி மக்களினதும் காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறனை வலுவூட்டுதல் - (GCF நகல்ஸ் கருத்திட்டம்) | | | |

## 02 அத்தியாயம் – விருத்தி மற்றும் எதிர்க்கால நோக்குகை

### 2.1. விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்க்கால இலக்குகள்

### 2.1.1. விசேட அம்சங்கள் மற்றும் விருத்தி

இலங்கையின் நீர்ப்பாசனத்துறையை மேம்படுத்தும் முகமாக நீர்வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக முக்கிய பங்களிப்பை வழங்கும் நீர்ப்பாசனப் பிரிவு, நெற் பயிர்ச் செய்கைக்கான நீர் வழங்குதலையும் உள்ளடக்கி, இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் பல்வேறு தேவைகள் தொடர்பாக நீரை வழங்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறே, இலங்கை முழுதும் பரவியுள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்புகளின் முன்னெடுப்பு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, நீர்ப்பாசன கட்டமைப்புகளை மேம்படுத்துவதும், நாட்டின் குடி நீர்த் தேவையை பூர்த்தி செய்வதும், மின் உற்பத்திக்கான நீர் வழங்குதலும் நீர்ப்பாசனப் பிரிவின் செயற் பணிகளாகக் காணப்படுகின்றன.

நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்ட இலங்கையின் முக்கிய நீர்ப்பாசனக் கருத்திட்டமான உமா ஓய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இதன் மூலம் நாட்டின் மொத்த மின்சாரத் தேவைக்கு மேலதிகமாக 120 மெகா வொட் கொள் திறனுள்ள மின் வலு தேசிய மின் வலுத் தொகுதிக்கு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. கருத்திட்டம் நிறைவடைந்திருந்த போதும் குறைகளை சரி செய்யும் காலப் பகுதியில் மீதமுள்ள பணிகள் மற்றும் குறைப்பாடு திருத்தும் பணிகள் ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால், கருத்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) 2026.03.31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கு, மண் சரிவு போன்ற பேரழிவுகளுடன் தொடர்புடையதாக உலகளாவிய ரீதியாக ஆபத்து நிலையிலுள்ள நாடுகளிடையே இலங்கையும் உள்ளடங்குவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனடிப்படையில், காலநிலை தாக்கங்களை தணிக்கும் பல கட்ட நிகழ்ச்சித் திட்டம் (CResMPA) உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக வெள்ளப் பெருக்கு, மண் சரிவு போன்ற அனர்த்தங்கள் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி இயக்கம் ஆகிய நிறுவனங்களின் முன்னெச்சரிக்கை தொகுதிகளை மேம்படுத்தி தொடர்புடைய முன்னறிவிப்புகளை துல்லியமாக மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அந்நிறுவனங்களுக்கு உரித்தான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், களனி ஆறு சார்ந்த வெள்ளப் பெருக்கை குறைப்பதையும், குடி நீர்த் தேவையை பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு மேல் நீரேந்து பிரதேசத்தில் வீ ஓய நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதுடன் தொடர்புடைய திட்டங்களை வடிவமைக்கும் செயற் பணிகள் மதியுரை நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அம்பதலே உவர் நீர் தடுப்பானை நிர்மாணிப்பதுடன் தொடர்புடைய திட்டங்களை மதிப்பாய்வு செய்யும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, 25 மாவட்டங்களுடன் தொடர்புடையதாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் மறு சீரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

நடுத்தர மற்றும் பாரியளவிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் முதல் நிலைப் பணிகள் மற்றும் கால்வாய்த் தொகுதிகளின் மறு சீரமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு மற்றும் மேல் மகாவலி நீரேந்து பிரதேசத்தை பாதுகாக்கும் முதல் நிலை திட்டங்களை

செயற்படுத்துவதை மையமாகக் கொண்டதாக ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்தினதும் (IWWRMP) இலக்குகளை எய்தப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்துடன் (MWSIP) தொடர்புடைய வட மத்திய மாகாண பாரிய கால்வாய் (NCPCP) கருத்திட்டத்தின், 27.7 கி.மீற்றர் நீளமான சுரங்கப் பாதையின் நிர்மாணிப்புப் பணிகளும், மினிபே வலக் கரை வாயிற் கதவு கட்டமைப்பின் பணிகளும் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. களு கங்கை - மொரகஹகந்தவை இணைக்கும் 8.8 கி.மீ நீளமான கால்வாய்.·.சுரங்க வழியின் நிர்மாணிப்புப் பணிகள் 100% நிறைவு பெற்றுள்ளன. இக் கருத்திட்டத்தின் முதல் கட்டம் 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டதுடன், இரண்டாம் கட்டத்தின் பணிகள் இன்றளவிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கிராம - நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத்துக்கு எதிரான தாங்கும் திறன் மேம்பாட்டு கருத்திட்டம் (IRDCRP) எனப்படுவது இலங்கையில், குறிப்பாக நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் விவசாயத்தின் மீது தங்கியிருக்கக் கூடிய கிராமிய மாவட்டங்களில் காணப்படும் உயர் வறுமை நிலையும், காலநிலை தாக்கங்களுக்கும் உள்ளாகக் கூடியதென அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் தேவையான பல் துறை தலையீடுகளை முன்னெடுக்கும் கருத்திட்டமாகக் காணப்படுகின்றது. இது தொடர்பாக கருத்திட்ட முகாமைத்துவ அலகு நிறுவப்பட்டிருப்பதுடன், இது ஆரம்ப கட்டத்தில் செயற்பட்ட வண்ணமுள்ள கருத்திட்டமாகக் காணப்படுகின்றது. இக் கருத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன் கூடியதாக செயற்படுத்தப்படுகின்றது.

இச் சாதனைகளுக்குப் புறம்பாக, 2025 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட திட்வா புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக நீர்ப்பாசன தொகுதிகளுக்கும், அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புகளை மீளமைத்துக் கொள்ளும் முகமாக தேவையான செயல் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் தொடர்பாக வருட இறுதிக் கால கட்டத்தில் அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டது.

அதனடிப்படையில், இன்றளவில் துரிதமாக புதுப்பிக்கப்பட வேண்டிய நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் தற்காலிக நடவடிக்கைகளின் மூலம் மாற்றீடுகளுக்கு உட்படுத்தி புதுப்பிக்கப்பட்டிருப்பதுடன், 2026 ஆம் ஆண்டிலும் மறு சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அவசர நிலை மறுமொழி உள்ளடக்கத்தின் கீழ் (CERC) ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்தின் (IWWRMP) மூலம் அமெரிக்க டொலர் 12 மில்லியன் மற்றும் காலநிலை தாக்கங்களை தணிக்கும் பல கட்ட நிகழ்ச்சித்திட்ட (CResMPA) கருத்திட்டத்தின் மூலம் அமெரிக்க டொலர் 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், ஏனைய நிதியங்கள் திறைசேரியினால் வழங்கப்படவுள்ளன.

நீர்ப்பாசன பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்களின் விருத்தி கீழ்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

## 1. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (MWSIP)

<table>
<tr><td>மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)</td><td>அமெரிக்க டொலர் 536.50 மில்லியன் (திருத்தப்பட்ட) (USD 1= ரூபா 300)</td><td>பலனடையக் கூடிய மாவட்டம்</td><td>பொலன்னறுவை, அனுராதபுரம், மாத்தளை, குருநாகல்</td></tr>
<tr><td>நிதி வசதிகள் பெறப்படுகின்ற வழி முறை</td><td>ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசு</td><td>நீர்த்தேக்கத்தின் கொள் திறன் (மில்லியன் சதுர மீற்றர் ∴ பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்)</td><td>• முதல் கட்டம் - 32,800<br>• இரண்டாம் கட்டம் - 68,000</td></tr>
<tr><td>கருத்திட்ட காலப் பகுதி</td><td>முதல் கட்டம் : 2015 - 2025<br>இரண்டாம் கட்டம் : 2026 - 2030</td><td>பலனடைவோர்</td><td>கிட்டத்தட்ட 1,399,000 நபர்கள்</td></tr>
<tr><td>2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)</td><td>30,973.73</td><td>நிதி விருத்தி 2025 (ரூபா மில்லியன்)</td><td>20,565.35</td></tr>
<tr><td>முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)</td><td>138,127.87</td><td>மொத்த பௌதீக விருத்தி (மூ)</td><td>35.5</td></tr>
<tr><td>2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்</td><td colspan="3">• கலு கங்கை – மொரகஹகந்த பரிமாற்றக் கால்வாய் (KMTC) கருத்திட்டத்தை நிறைவு செய்து மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கும் செயல் முறை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.<br>• மினிப்பே இடது கரைக் கால்வாய் புனரமைப்பு திட்டம் (MLBCRP) கருத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்து நீர்ப்பாசன திணைக்களத்துக்கு ஒப்படைக்கும் செயல் முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.<br>• மேல் எலஹெரா கால்வாய் (UECP-ICB-2A) சுரங்க அகழ்வுப் பணிகள் பெரும்பாலும் நிறைவு பெற்றுள்ள நிலையில், 2025 ஆம் ஆண்டிற்குள் சுமார் 8.77 கி.மீற்றர் (மொத்த விருத்தி – சுமார் 25 கி.மீற்றர்) பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் (ரூபா மில்லியன்)</td><td colspan="3">29,000.00<br>(ஆசிய அபிவிருத்தி வங்கி – 24,000 + இலங்கை அரசு – 5,000.00)</td></tr>
<tr><td>கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற மொத்த பலன்கள்</td><td colspan="3">• ஹுருளு வாவி, மான்னக்கட்டிய, ஏரு வாவி, மககந்தரவ, நாச்சதுவ, நுவர வாவி மற்றும் திசா வாவி ஆகிய பாரிய நீர்ப்பாசன கட்டமைப்புகளில் 12,300 ஹெக்டயார் பரப்பளவில் பயிர்த் தீவிரத்தை உயர்த்துதல் மற்றும் வட மத்திய மாகாணத்தின் குடி நீர்த் தேவைக்காக ஆண்டு தோறும் 40 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவுள்ள நீரை விநியோகித்தல்.<br>• வணிக விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக, உயர்ந்த</td></tr>
</table>

| | |
|---|---|
| | பொருளாதார நன்மைகளை உறுதிப்படுத்துதல், காணி மற்றும் நீரின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் அந்நிய செலாவணி தோற்றுவிப்பின் ஊடாக விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. |

**மகாவலி வலயங்களில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.**

| முக்கிய செயற்பாடு/ கருத்திட்டம் | 2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | மாவட்டம் | விருத்தி | |
|---|---|---|---|---|
| | | | பௌதீக விருத்தி | நிதி விருத்தி (ரூபா மில்லியன்) |
| 01. லேயர் வகை முட்டை கோழிக் குஞ்சுகள் 100,000 மற்றும் 5 மாதங்களுக்குத் தேவையான தீவனத்தை வழங்குதல் | 94.9 | அனுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை, கண்டி, இரத்தினபுரி | மகாவலி பீ, சீ, டீ, ஈ, ஜீ, எச், ஹுறுலுவெவ மற்றும் வலவ ஆகிய பிரதேசங்களில் 1,926 குடும்பங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், இன்றளவிலும் முட்டை உற்பத்தி நடைபெற்று வருகின்றது. | 94.9 |
| 02. மீன் இனப்பெருக்க நிலையமொன்றை நிறுவுதல் | 163.7 | பொலன்னறுவை | மகாவலி பீ வலயத்தில் அமைந்துள்ள அரலகன்வில விதை பண்ணை நிலப் பரப்பில், முன்மொழியப்பட்ட மீன் இனப் பெருக்க மையம் நிர்மாணிக்கப்பட்டிருப்பதுடன், அதன் மூலம் மகாவலி பிரதேசங்களில் நன்னீர் குளங்களுக்குத் தேவையான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் செயற்பாட்டை 2026 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. | 186.9 |
| 03. பாற் பசு வளர்ப்பை மேம்படுத்துதல் | 221.8 | ஆனுராதபுரம, பொலன்னறுவை, மாத்தளை | மகாவலி பீ, சீ, டீ, ஜீ, எச் மற்றும் ஹுறுலுவெவ ஆகிய வலயங்களில் பொருத்தமான தகைமைகளை பூர்த்தி செய்த 243 விவசாயிகளுக்கு பின்வரும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன: 3 மாதங்களுக்குத் தேவையான செறிவூட்டப்பட்ட கால்நடை தீவனம் | 255.6 |

| முக்கிய செயற்பாடு/ கருத்திட்டம் | 2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | மாவட்டம் | விருத்தி | |
|---|---|---|---|---|
| | | | பௌதீக விருத்தி | நிதி விருத்தி (ரூபா மில்லியன்) |
| | | | புல் நறுக்கும் இயந்திரம்<br>1 ஏக்கர் அல்லது ½ ஏக்கர் அளவிலான தீவனப் பயிரிடுகை நிலங்களுக்கு,<br>• நுண் அளவிலான நீர்த் தொகுதிகள்<br>• பயிரிடும் நிலப் பரப்பை சுற்றி சாதாரண மற்றும் மின்சார வேலிகளுக்கான உபகரணங்கள்<br>• பயிரிடும் நிலப் பரப்பை நிறுவி பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்<br>அசோல்லா தொட்டிகள் மற்றும் கழிவு நீர் தொட்டிகளை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்<br>பாற் பசுக்களுக்கான சான்றளிக்கப்பட்ட செயற்கை கருவுறுத்தல் சேவைகளை அதிக பட்சம் 5 தடவைகள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் | |

## 2. உமா ஓய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)** | 89,748.00 | **பலனடைகின்ற மாவட்டங்கள்** | பதுளை மற்றும் மொணராகலை |
| **நிதி வசதிகள் பெறப்படுகின்ற வழி முறை** | ஈரானின் பொருளாதார அபிவிருத்தி வங்கி - அமெரிக்க டொலர் 50.00 மில்லியன்<br><br>இலங்கை அரசு - அமெரிக்க டொலர் 479.00 மில்லியன் | **நீர்த்தேக்கத்தின் கொள் திறன் (மில்லியன். சதுர மீற்றர்) ∴ பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்)** | • பூஹல்பொல அணைக்கட்டு - 0.6 மில்லியன் கன மீற்றர்<br>• டயரபா நீர்த்தேக்கம் - 0.9 மில்லியன் கன மீற்றர்<br>தற்சமயம் நிலவுகின்ற 1,500 ஹெக்டயார் மற்றும் புதியதாக விருத்தி செய்த 4,500 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள நிலப் பகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் ரூபா 15.474 மில்லியன் | | உள்ளடங்கலாக மொத்தமாக 6,000 ஹெக்டயார அளவிலான பயிர்ச் செய்கை நிலப் பகுதி |
| **கருத்திட்ட காலப் பகுதி** | **முதல் நிலை ஒப்பந்த காலப் பகுதி** | அடிப்படை பணிகள் - 2010 மார்ச் - 2015 மார்ச் | **பயனாளிகள்** | • கருத்திட்டத்தின் கீழ் பள்ளத்தாக்கு மேம்பாட்டின் வாயிலாக 6,000 குடும்பங்கள்<br>• மின்சாரம் உற்பத்தியின் மூலம் முழு மொத்த பொது மக்களுக்கும் பயன் கிடைக்கும் |
| | **கால நீடிப்பு** | 2015 மார்ச் - 2026 மார்ச் | | |
| **2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | | 1,920.00 | **நிதி விருத்தி 2025 (ரூபா மில்லியன்)** | 1,288.91 (அடிப்பபை பணிகள்) |
| **முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)** | | 83,207.53 | **மொத்த பௌதீக விருத்தி (%)** | 99.98 |
| **2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்** | | • மீள் ஏற்றுமதி செயல் முறையை ஆரம்பித்தல்<br>• அடையாளம் காணப்பட்ட குறைகளை திருத்துதல்<br>• கருத்திட்டத்துடன் தொடர்புடையதாக நிறைவு செய்யப்பட்ட 3,215 குறிப்புகள், தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. (இலங்கை மகாவலி அதிகார சபை, இலங்கை மின்சார சபை) | | |
| **2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | | 1,270.00* | | |
| **கருத்திட்டம் செயற்படுத்தப்பதுவதன் வாயிலாக பெறப்படுகின்ற முழு மொத்த பலன்கள்** | | • உமா ஒய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கம், தென் கிழக்குப் பகுதியின் உலர் வலயத்தின் நீர் வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக உமா ஒய பள்ளத்தாக்கிலிருந்து கிரிந்தி ஒய நீரேந்துப் பிரதேசத்துக்கு ஆண்டு தோறும் மேலதிகமாக 145 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவுள்ள நீரை, உமா ஒய பள்ளத்தாக்கின் நீர் பயனாளிகள் மற்றும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் திசை திருப்புவதாக காணப்படுகின்றது.<br>• மொணராகலை மாவட்டத்தில் சுமார் 4,500 ஹெக்டயார் புதிய நிலங்களுக்கும், தற்போது காணப்படுகின்ற சுமார் 1,500 ஹெக்டயார் விவசாய நிலங்களுக்கும் பாசனத்துக்கென நீர் வழங்கப்படுவதுடன், மொணராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களின் குடி நீர் மற்றும் தொழிற் துறை நீர்த் தேவைகளுக்காக 30 மில்லியன் சதுர மீற்றர் கொள்ளளவுள்ள நீர் விநியோகிக்கப்படும்.<br>• 120 மெகா வொட் கொள் திறனுள்ள நிலக் கீழ் மின் நிலையத்தின் மூலம் ஆண்டு தோறும் தேசிய மின் வலுத் தொகுதிக்கு 290 கிகா வொட் மணித்தியாலம் கொள் திறனுள்ள மின்சாரம் ஒன்று | | |

| | |
|---|---|
| | சேர்க்கப்படுகின்றது.<br>• மேலும், ஆண்டு தோறும் 9 மில்லியன் கன மீற்றர் கொள் திறனுள்ள நீர், பதுளை மாவட்டத்தின் பண்டாரவல பிரதேசத்துக்கு டயரபா நீர்த்தேக்கத்திலிருந்தும், அட்டம்பிட்டிய பிரதேசத்தின் பூஹல்பொல நீர்த்தேக்கத்திலிருந்து வழங்கப்படும். மொணராகலை மாவட்டத்தின் வெல்லவாய மற்றும் தணமல்வில ஆகிய பிரதேசங்களுக்குத் தேவையான குடி நீர், அலிகொட்ட ஆர நீர்த்தேக்கத்திலிருந்து வழங்கப்படும்.<br>• 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் உமா ஒய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன், அதன் மின்வலு நிலையம் செயற்படுத்தப்பட்ட பிற்பாடு, கருத்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை தாண்டிய வண்ணம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. தேசிய மின்சார வலையமைப்பிற்கு சுமார் 625 கிகா வொட் மணித்தியாலம் (GWh) அளவிலான நீர் மின் சக்தி ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 21 மாதங்களில் தாழ் நிலப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக கிரிந்தி ஒய நீரேந்து பிரதேசத்துக்கு சுமார் 235 மில்லியன் கன மீற்றர் (MCM) கொள்ளளவுள்ள நீர் வெளியிடப்பட்டுள்ளது.<br>• இதற்கு மேலாதிகமாக, பதுளை மற்றும் மொணராகலை ஆகிய மாவட்டங்களின் குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக 39 மில்லியன் கன மீற்றர் (MCM) கொள்ளளவுள்ள நீர் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, இக் கருத்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் கீழான பலன்கள் நாட்டு மக்களுக்கு தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றன. இம் மின்சாரத்தை வெளிப் புற மூலங்களிலிருந்து பெறப்பட்டிருப்பின், அதற்காக சுமார் அமெரிக்க டொலர் 180 மில்லியன் நிதி செலவாகியிருக்கும். |

ழூ உமா ஒய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டற்கென ஒதுக்கப்பட்ட செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. எனினும், ''கருத்திட்டங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட நிலப் பகுதிகள் தொடர்பான செலவுகள்'' எனும் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 3. மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்கக் கருத்திட்டம்

| **மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)** | 120,700.00 | **பலனடைகின்ற மாவட்டங்கள்** | மாத்தளை, பொலன்னருவை மற்றும் அனுராதபுரம் |
|---|---|---|---|
| **நிதி வசதிகள் பெறப்படுகின்ற வழி முறை** | இலங்கை குடியரசு, அபிவிருத்தி தொடர்பான சவூதி நிதியம், சர்வதேச அபிவிருத்தி தொடர்பான ஒபெக் நிதியம், அராபிய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான குவேட் நிதியம் | **நீர்த்தேக்கத்தின் கொள் திறன் (மில்லியன். சதுர மீற்றர்) ∴ பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்)** | மொரகஹகந்த - 557.87 மில்லியன் சதுர மீற்றர்<br>களு கங்கை - 248.00 மில்லியன் சதுர மீற்றர் |

<table>
<tr><td rowspan="2">கருத்திட்ட காலப் பகுதி</td><td>முதல் நிலை ஒப்பந்த காலப் பகுதி</td><td>2007 - 2015</td><td rowspan="2">பலனடைவோர்</td><td rowspan="2">மாத்தளை, பொலன்னருவை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களினது குடி மக்கள்</td></tr>
<tr><td>கால நீடிப்பு</td><td>2015 - 2025</td></tr>
<tr><td colspan="2">2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)</td><td>806.00</td><td>நிதி விருத்தி 2025 (ரூபா மில்லியன்)</td><td>798.69</td></tr>
<tr><td colspan="2">முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)</td><td>120,695.34</td><td>மொத்த பௌதீக விருத்தி (%)</td><td>99.93</td></tr>
<tr><td colspan="2">2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்</td><td colspan="3">• மொரகஹகந்த – களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழான காணி சுவீகரிப்பு தொடர்பாக நட்ட ஈட்டை செலுத்துதல்.<br>- பிரதேசச் செயலக ரீதியாக, லக்கலவில் 55 உம், நாஉலவில் 13 உம், எலஹெரவில் 16 உம், மெதிரிகிரியவில் 96 மற்றும் கந்தளாயில் 91 எனும் அடிப்படையிலும் காணித் துண்டங்களின் விபரங்கள் மதிப்பீட்டு செயன் முறைக்கென மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன (எலஹெர பிரதேசச் செயலக பிரிவில் 98 பேருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது).<br>- நாஉலவில் 5 காணித் துண்டங்கள் மற்றும் எலஹெரவில் 7 காணித் துண்டங்கள் தொடர்பிலான மதிப்பீடு கிடைக்கப் பெற்றுள்ளது.<br>- லக்கலவில் 22 காணித் துண்டங்கள் மற்றும் நாஉலவில் 5 காணித் துண்டங்களின் விபரங்கள் நில அளவைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.</td></tr>
<tr><td colspan="2">2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)</td><td colspan="3">80.00*</td></tr>
<tr><td colspan="2">கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற முழு மொத்தப் பலன்கள்</td><td colspan="3">• 557 மில்லியன் சதுர மீற்றர் கொள்ளளவுள்ள மொரகஹகந்த நீர்த்தேக்கம்<br>• 248 மில்லியன் சருட மீற்றர் கொள்ளளவுள்ள களு கங்கை நீர்த்தேக்கம்<br>• மின் பிறப்பாக்கம் - வருடாந்தம் 114.5 கிகா வொட் மணித்தியாலம் கொள் திறனுள்ள நீர் மின்னை உற்பத்தி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இதன் வாயிலாக வருடாந்தம் எரிபொருள் தொடர்பாக ஏற்படக் கூடிய ரூபா 1,545 மில்லியன் சேமிக்கப்படும்.<br>• பொதுப் பயன்பாடு தொடர்பாக - 465 கட்டிடங்கள்<br>• 276 கி. மீ நீளமான வீதி வலையமைப்பு<br>• 330 கி. மீ நீளமான கால்வாய் தொகுதி<br>• 11 சிறு குளங்களை நிர்மாணித்தல்<br>• 20 நடுத்தர அளவிலான குளங்களை நிர்மாணித்தல்</td></tr>
</table>

| | |
|---|---|
| | • **விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக 5,000 ஹெக்டயார் அளவிலான மேலதிக நிலங்கள் ஒன்று சேர்க்கப்படுதல்.**<br>• **நாட்டில் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல்.**<br>• கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் இன்றளவில் 100% இலிருந்து 154% வரையான பயிர்ச் செறிவு 181% வரை அதிகரிக்கும். ஒரு ஹெக்டயாருக்கான நெர் விளைச்சலை அதிகரித்தல் உள்ளடங்களாக நேரடியாகப் பெறத் தக்க பலன களின் வாயிலாக வருடாந்தம் 123,000 தொன் மேலதிக விவசாய உற்பத்தி பெறப்படும். இதன் வாயிலாக கிடைக்கின்ற வருடாந்த நிகர விவசாயப் பலன் ரூபா 4,000 மில்லியனாகக் காணப்படுமென கணிப்பிடப்பட்டுள்ளது.<br>• மாத்தளை, பொலன்னருவை, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு குடி நீர் மற்றும் கைத்தொழில் நீர் வசதிகளை ஏற்பாடு செய்தல்.<br>• **நன்னீர் மீனவத் துறை -** சாதாரண மீன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 4,700 தொன் ஆகக் காணப்படுமென மதிப்பிடப்பட்டிருப்பதுடன், வருடாந்த நிகரப் பலன் ரூபா 940 மில்லியனாகக் காணப்படுகின்றது.<br>• **அதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் -** 650 நபர்களுக்கு நேரடியாக கருத்திட்டத்தினுள் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். இரத்தினக் கல் மற்றும் தங்காபரண, ஹோட்டல் முகாமைத்துவம் மற்றும் சுய தொழில் பயிற்சி போன்றவற்றை நடாத்துவதன் மூலம்/ஒழுங்கு செய்வதன் மூலம் அதிகளவில் இளைஞர் யுவதியர் பயிற்றுவிக்கப்படுவர்.<br>• **சுற்றுச் சூழல் சுற்றுலாத் துறை கருத்திட்டத்தை விருத்தி செய்தல் -** வஸ்கமுவ தேசிய சரணாலயம், மின்னேரியா தேசிய வனாந்திரம் மற்றும் ரிவர்ஸ்டன் போன்றவற்றை விருத்தி செய்வதன் மூலம் சுற்றுச் சூழல் நேயமிக்க சுற்றுலாத் துறை கருத்திட்டம் மேலுயர்த்தப்படும்.<br>• **வெள்ளப் பாதுகாப்பு -** சோமாவதி மற்றும் மனம்பிட்டிய பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பாதிப்புகளை கட்டுப்படுத்துதல். |

மூ மொரகஹகந்த – களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டற்கென ஒதுக்கப்பட்ட செலவின தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. எனினும், ''கருத்திட்டங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட நிலப் பகுதிகள் தொடர்பான செலவுகள்'' எனும் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 4. காலநிலை தாக்கங்களைத் தணிக்கும் பல் நோக்கு நிகழ்ச்சித் திட்ட பிரவேசிப்பு (CResMPA)

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)** | 15,567.00<br>USD 76 Mn | **பலனடைகின்ற மாவட்டங்கள்** | இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களும் |
| **நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற வழி முறை** | IBRD - உலக வங்கி | **நீர்த்தேக்கத்தின் கொள்திறன் (மில்லியன் சதுர மீற்றர்கள் / பயிர்ச் செறிவு (ஹெக்டயார்)** | மில்லியன் சதுர மீற்றர்கள் 56<br>ஹெக்டயார் 25,000 |

| | | | |
|---|---|---|---|
| கருத்திட்ட காலப் பகுதி | ஆண்டுகள் 6 (2021 - 2026) | **பலனடைவோர்** | • மேம்படுத்தப்பட்ட வானிலை மற்றும் வெள்ள அனர்த்த அபாய முன் எச்சரிக்கைகளின் மூலம் 3.5 மில்லியன் அளவிலான பொது மக்களின் பாதுகாப்பை மேலுயர்த்துதல்.<br>• களனி ஆற்றுப் பள்ளத்தாக்கின் வெள்ளப் பெருக்கு நிலை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான எதிர்ப்புத் திறனை மேம்படுத்தும் பல் நோக்கு நீர் உட்கட்டமைப்பு வசதிகளின் வாயிலாக 1,800,000 எண்ணிக்கையிலான பொது மக்களுக்கு நன்மை அளித்தல். |
| **2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | 9,032.00 | **நிதி விருத்தி 2025 (ரூபா மில்லியன்)** | 2,380.66 |
| **முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)** | 5,300.02 | **மொத்த பௌதீக விருத்தி (%)** | 69.10 |
| **2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்** | **கண்காணிப்பு வலையமைப்பை மேம்படுத்துவதற்காக**<br>• **வளிமண்டலவியல் திணைக்களம் (DOM) :** நவீன எதிர்வு கூறல் வசதிகள் மற்றும் போதுமான முன் கூட்டிய சரியான வானிலை எதிர்வு கூறல்களை வெளியிடும் திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான வகையில் DOM சேவைகளை நவீனமயப்படுத்துவதற்கான வழிகாட்டி வரை படத்தை தயாரிக்கும் முகமாக இணைப்பு செய்யப்பட்ட சர்வதேச மதியுறை நிறுவனத்தின் வாயிலாக தகவல் தொழில்நுட்ப (IT) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உபகரணங்கள் மற்றும் தொகுதிகளின் பெருகை செயற்பாடுகள் தொடர்பாக தேவையான முறைமைகள் கொள்முதல் செய்வதற்கான விவரக் குறிப்புகள் உள்ளடங்கிய வழிகாட்டல் வரை படத்தை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துகை திட்டத்தை தயாரித்தல், தலைமை அலுவலகம் மற்றும் 9 பிராந்திய அலுவலகங்களை புதுப்பிக்கும் முகமாகவும் அனுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை மற்றும் மொணராகலை ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்கள் மற்றும் உத்தியோக பூர்வ இல்லங்களை மீள் புதுப்பிப்பதற்குத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல் (பெருகை செயற்பாடுகளுக்குத் தேவையான நடவடிக்கைகள்) மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |

| | |
|---|---|
| | • **நீர்ப்பாசன திணைக்களம் (ID)** : நீரியல் மேற்பார்வை தொகுதியாக ஒருங்கிணைத்தல், ஆய்வு கூட மற்றும் அலுவலக வலாகங்களை மறு சீரமைப்பதன் வாயிலாக நீரியல் விருத்தி செய்கைகள், ஆய்வு கூட உபகரணங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உபகரணங்கள், ARC GIS மென் பொருள் மற்றும் 3 LIDAR டுரோன் விமானங்கள் கையளித்தல், 100 புதிய நீரியல் நிலையங்களை அடையாளம் காணும் பொருட்டு மதியுறை சேவைகளை கையளிக்கும் பொருட்டு ஒப்பந்தத்தை கையளித்தல்.<br><br>• **நீரியல் ஆய்வு கூடங்களை மேம்படுத்துதல்** : நீரியல் ஆய்வு கூடம் மற்றும் அலுவலக மீள் நிர்மாணம், மின்சாரத் தொகுதி மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு மீள் நிலை நாட்டப்பட்டது.<br>• **தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)** : அதிக அபாய நிலையிலான 14 நிலவமைப்பு இடங்களில் 150 தன்னியக்க மழை அளவீட்டு இயந்திரங்களை நிறுவுவதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டுக்கு எடுக்க முடியாதிருந்த 330 மழை மானிகள் தன்னியக்க மழை மானிகளின் வாயிலாக நிலை நாட்டப்பட்டதுடன், தொகுதி முற்று முழுதாக இயங்கிய வண்ணமுள்ளது. தகவல் தொடர்பாடல் (ICT) உபகரணங்கள், டிஜிட்டல் திரைகள் மற்றும் உயர் தொழில்நுட்பத் திறன் கொண்ட கணினிகள் வழங்கப்பட்டதன் வாயிலாக நிலை நாட்டப்பட்ட அவசர செயற்பாட்டு மையம் செயற்பட்ட வண்ணமுள்ளது. சேவைகளை மேம்படுத்தும் முகமாக வழங்கப்பட்ட மேசைக் கணினிகள் மற்றும் மடிக்கணினிகள், நாட்டினுள் வாயுத் தராதர உணர் திறன் மிக்க வலையமைப்பை நிலை நாட்டும் பொருட்டு 100 நிலையங்களை நிறுவும் முகமாக உபகரணங்களை கையளித்தல் மற்றும் மண் சரிவு முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக, gINT, ZodST20, ArcGIS, MATLAB, SarProz, GMS Groundwater Pro, Arc Hydro Groundwater, VR SIMLAB, Pix4D போன்ற மென்பொருட்கள் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன.<br>• **அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC)** : 5 KV மின் பிறப்பாக்கி இயந்திரங்கள், அனர்த்தங்களின் போது பாதுகாப்பு பெறும் குழாய்கள், மெகா போன், வாகன முகாமைத்துவம் தொடர்பாக, GPS வாகனங்களை பின் தொடரும் தொகுதியை வழங்குதல் மற்றும் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை நவீனமயப்படுத்தும் பொருட்டு வீதி வரைபடங்களை தயாரிக்கும் பொருட்டு மதியுறை ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டுள்ளது.<br>• **உவர்ப் நீர்த் தடுப்பான்களை நிர்மாணித்தல் :**<br>அம்பதலே களனி ஆற்றுக்குக் குறுக்காக நிரந்தர உவர் நீத் தடுப்பானொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு ஒப்பந்தக்காரரொருவரை இணைத்துக் கொள்வதற்குத் தேவையான திட்டமிடுகைகள் மற்றும் விலை மனு ஆவணங்களை நிறைவு படுத்தும் பொருட்டு CRIP இன் கீழ் விருத்தி செய்யப்பட்ட முதல் நிலை திட்டமிடல்களை மதிப்பீடு செய்து விருத்தி செய்யும் முகமாக EGIS பொறியியல் நிறுவனம் மதியுறை சேவைகள் தொடர்பாக இணைத்துக் கொள்ளப்பட்டது. |

| | |
|---|---|
| | இம் மதியுறை சேவையினால் இன்றளவிலும் தயாரிக்கப்பட்டுள்ள திட்டம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, முன்னெடுப்பு வினைத் திறன் மற்றும் நிர்மாணிப்பு செலவை வினைத் திறன் மிக்கதாக மேலுயர்த்தும் பொருட்டு காணப்படுகின்ற திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மாறுபாடுகள் உள்ளடங்கிய அறிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. மதியுறை சேவைக்கென இணைத்துக் கொள்ளும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட ஆரம்ப TOR இன் கீழ் உள்ளடங்காத மேலதிகப் பணி விடயப் பரப்பு தொடர்பாக இம் முன் மொழிவு முன் வைக்கப்பட்டுள்ளது.<br>மேலதிக பணி விடயப் பரப்பு தொடர்பான முன் மொழிவு உலக வங்கிக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்புகள் தொடர்பாக ஒப்பந்தக்காரரொருவரை இணைத்துக் கொள்ளும் பொருட்டு தொடர்புடைய கடிதக் கோப்புகள், அளவியல் பட்டியல்கள் மற்றும் விலை மனு ஆவணங்களினது பணிகளை பூர்த்தி செய்யும் பொருட்டான மேலதிக செயற் பணிகளுக்கென அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>• **வீ ஓய நீர்த்தேக்கத்தை மேம்படுத்துதல்** : தாழ் களனி பள்ளத்தாக்கின் வெள்ளப் பெருக்கு நிலையை கட்டுப்படுத்தும் முகமாகவும், துறைமுக நகரம் மற்றும் கொழும்பு தலை நகருக்கு குடி நீரை வழங்கும் நோக்கிலும் மழை காலப் பகுதியில் மழை நீரை சேமிக்கும் முகமாக யட்டியந்தொட்ட வீ ஓய தொடர்பாக விரிவான வடிவமைப்பை தயாரிக்கும் முகமாக ஈரானிய Mahab Ghodss நியமிக்கப்பட்டது.<br>தொழில்நுட்ப பரிசீலனை குழுவினால் (TRC) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் முகமாக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் மண் சரிவு ஆரம்ப அறிகுறிகளை இனங்காணக் கூடியதாவிருப்பதால், மண் சரிவு அபாய நிலையை மேலும் ஆய்வு செய்யும் முகமாக முன் மொழிவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மண் சரிவின் கட்டமைப்பு ரீதியிலான தீர்வுகளை கண்டறியும் முகமாக மண் சரிவு அபாய நிலை மற்றும் மண் சரிவின் அளவை அளவிடும் பொருட்டு மண் சரிவு அனர்த்தம் தொடர்பிலான ஆய்வு மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது. அது விரிவான திட்டத்தின் கட்டமைப்பு ரீதியிலான தீர்வுகளை இனங் காண்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வடிவமைப்பை நிறைவு செய்வதற்குத் தேவையான புவியியல் ரீதியிலான ஆராய்வு மற்றும் புவியியல் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ளும் முகமாக மதியுறை நிறுவனமொன்று இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.<br>வீ ஓய நீர்த்தேக்கத்தின் நிர்மாணிப்பு காரணமாக பாதிப்புக்குள்ளான குடிகளுக்கு விழிப்புணர்வு திட்டமொன்று செயற்பட்ட வண்ணமுள்ளது. இதன் வாயிலாக பங்குதாரர்கள் உள்ளடங்கக் கூடிய வண்ணம் தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டங்களில் விழிப்புணர்வு மற்றும் மதியுரை கூட்டத் தொடரொன்று இக் கருத்திட்டத்தினால் நடாத்தப்பட்டுள்ளது. பாதிப்புக்குள்ளான சுமார் 203 குடும்பங்களுக்கான மீள் குடியேற்ற செயற் திட்டத்தை தயாரிக்கும் முகமாகவும், சமூக தாக்க மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்ளும் முகமாகவும் மதியுரை நிறுவனமொன்றை இணைத்துக் கொள்ளும் முகமாக பெருகை செயல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிர்மாணிப்புடன் தொடர்புடைய சுற்றுச் சூழல் தாக்கங்களை அடையாளம் காணும் பொருட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (EIA) மேற்கொள்ளும் முகமாக மேலுமொரு |

| | |
|---|---|
| | மதியுரையாளரொருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. |
| **2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | 9,150.00 |
| **கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக பெறப்படுகின்ற ஒட்டு மொத்த பலன்கள்** | • 25 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன மறு சீரமைப்பு வகுதிகளின் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 612,500 ஆகும்.<br>• வெள்ளப் பெருக்கு நிலை மற்றும் வறட்சி அனர்த்த நிலை காரணமாக 31,230 ஹெக்டயார் அளவிலான வயற் காணிகள் பாதுகாக்கப்பட்டிருப்பதுடன், பிரதான, நடுத்தர மற்றும் சிறியளவிலான நீர்ப்பாசன முன் மொழிவுத் திட்டங்களின் கீழான 141 கிலோ மீற்றர் நீளமான கால்வாய்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. |

**கருத்திட்ட நோக்கங்களினது மீள் நோக்கமிடுகை (Repurposing) செயற்பாட்டின் கீழ் இயங்குகின்ற பிரதானமான, நடுத்தர அளவிலான மற்றும் சிறு நீர்ப்பாசனக் கருத்திட்டங்களினது துரித மற்றும் அத்தியாவசியமான மறு சீரமைப்புப் பணிகளினது விருத்தி - 2025**

| மாவட்டங்கள் | அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | | | 2026 புதிய தொகுப்புகள் | ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) | | | | விருத்தி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024 | 2025 | மொத்தம் | | 2024 | 2025 | 2026 | மொத்தம் | பௌதீக (%) | நிதி (ரூ. மில்லியன்) |
| அம்பாறை | 55 | 4 | **59** | **0** | 437.1 | 34.51 | - | **471.61** | 95.93 | 230.51 |
| அனுராதபுரம் | 45 | 0 | **45** | **12** | 255.73 | 201.94 | 101.5 | **559.17** | 97.27 | 146.02 |
| பதுளை | 43 | 25 | **68** | **3** | 149 | 95.79 | 29 | **273.79** | 93.45 | 124 |
| மட்டக்களப்பு | 25 | 14 | **39** | **14** | 276.2 | 73.65 | 100 | **449.85** | 100.00 | 233.49 |
| கொழும்பு | 46 | 0 | **46** | **2** | 136.42 | 41.58 | 75 | **253** | 95.22 | 78.57 |
| கம்பஹா | 40 | 0 | **40** | **13** | 79.34 | - | 50 | **129.34** | 85.41 | 37.36 |
| களுத்துறை | 24 | 0 | **24** | **4** | 69.04 | - | 50 | **119.04** | 86.67 | 26.43 |
| ரத்தினபுரி | 129 | 0 | **129** | **2** | 323.83 | - | 50 | **373.83** | 98.29 | 246.11 |
| கண்டி | 11 | 3 | **14** | **15** | 28.3 | - | 83.32 | **111.62** | 100 | 20.99 |
| மாத்தளை | 12 | 1 | **13** | **17** | 46.75 | - | 60 | **106.75** | 98.33 | 33.39 |
| நுவரேலியா | 7 | 0 | **7** | **9** | 33.97 | - | 40.64 | **74.61** | 100 | 25.83 |
| கேகாலை | 24 | 0 | **24** | **10** | 36.03 | - | 29 | **65.03** | 100 | 27.79 |
| குருநாகல் | 36 | 1 | **37** | **17** | 138.83 | 154.74 | 150 | **443.57** | 96.94 | 94.3 |
| அம்பாந்தோட்டை | 48 | 3 | **51** | **16** | 306.48 | - | 150 | **456.48** | 99.90 | 231.63 |
| மன்னார் | 43 | 0 | **43** | **6** | 168.88 | - | 90 | **258.88** | 89.88 | 86.03 |
| வவுனியா | 30 | 10 | **40** | **2** | 136.06 | 61.33 | 20 | **217.39** | 100 | 98.65 |
| கிளிநொச்சி | 13 | 0 | **13** | **0** | 88.99 | - | - | **88.99** | 100 | 42.57 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு | 7 | 0 | **7** | **0** | 68.09 | - | - | **68.09** | 82.86 | 15.16 |
| யாழ்ப்பானம் | 17 | 0 | **17** | **0** | 92.45 | - | - | **92.45** | 85.41 | 45.65 |
| மொனராகலை | 89 | 11 | **100** | **15** | 499.39 | 83.23 | 87.5 | **670.12** | 98.97 | 321.99 |
| பொலன்னறுவை | 138 | 6 | **144** | **14** | 760.4 | 60.06 | 125 | **945.46** | 95.50 | 560.21 |
| புத்தளம் | 24 | 9 | **33** | **45** | 188.33 | 21.71 | 75 | **285.04** | 87.46 | 119.01 |
| திருகோணமலை | 42 | 0 | **42** | **27** | 265.12 | - | 175 | **440.12** | 98.21 | 198.84 |
| காலி | 48 | 0 | **48** | **13** | 205.77 | - | 47.6 | **253.37** | 92.23 | 120.26 |
| மாத்தறை | 39 | 0 | **39** | **16** | 195.62 | - | 78.65 | **274.27** | 100 | 136.38 |
| **மொத்தம்** | **1035** | **87** | **1122** | **272** | **4986.13** | **828.55** | **1,667.21** | **7,481.89** | **95.83** | **3301.15** |

## 5. ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் (IWWRMP)

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)** | 20,308.70<br>USD. 1 = ரூபா. 290.00 | **பலனடைகின்ற மாவட்டங்கள்** | அனைத்து மாவட்டங்களும் |
| **நிதி வசதிகள் பெறப்படுகின்ற வழி முறை** | உலக வங்கி மற்றும் இலங்கை அரசு | **நீர்த்தேக்கத்தின் கொள் திறன் (மில்லியன். சதுர மீற்றர்) ∴ பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்)** | பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்) - 229,010 |
| **கருத்திட்ட காலப் பகுதி** | 2021 மே - 2027 அக்டோபர் | **பயனாளிகள்** | 1,469,293 |
| **2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | 5,550.00 | **நிதி விருத்தி 2025 (ரூபா மில்லியன்)** | 1,749.47 |
| **முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)** | 7,950.74 | **மொத்த பௌதீக விருத்தி (%)** | 81.87 |
| **2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்** | கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளின் மறு சீரமைப்பு உள்ளடங்களான பணி ஒப்பந்த வகுதிகளின் விருத்தி<br>• நீர்ப்பாசன திணைக்களம் - மொத்தமாக 20 பணி ஒப்பந்த வகுதிகளை இலக்கிட்டதான பணிகள் நிறைவு செய்யப்பட்ட வண்ணமுள்ளன.<br>• இலங்கை மகாவலி அதிகார சபை - மொத்தமாக 31 பணி ஒப்பந்த வகுதிகளை இலக்கிட்டதான பணிகள் நிறைவு செய்யப்பட்ட வண்ணமுள்ளன.<br>• வட மாகாண நீர்ப்பாசன திணைக்களம் - மொத்தமாக 18 பணி ஒப்பந்த வகுதிகளை இலக்கிட்டதான பணிகள் நிறைவு செய்யப்பட்ட வண்ணமுள்ளன.<br>• கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் - மொத்தமாக 16 பணி | | |

| | |
|---|---|
| | ஒப்பந்த வகுதிகளை இலக்கிட்டதான பணிகள் நிறைவு செய்யப்பட்ட வண்ணமுள்ளன.<br>• மதியுறை சேவைகள் - 26 வகுதிகள் செயற்பட்ட வண்ணமுள்ளன. 6 வகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன<br>• பண்டங்கள் - 19 வகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>• அமெரிக்க டொலர் 10 மில்லியன் மீள் நோக்கப்படுத்துகை செயற்பாடுகளின் (சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்புப் பணிகள்) கீழ், பணி ஒப்பந்தங்களின் பெருகை நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ பணிகள் (760 பணி வகுதிகள்) இன்றளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| **2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | 5,100.00 |
| **கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற ஒட்டு மொத்த பலன்கள்** | • கருத்திட்டத்தின் கீழ் செயற்படுகின்ற 34 அணைக்கட்டுகளின் அபாய நிலையை குறைத்தல். 91,831 ஹெக்டயார் அளவிலான நீர்ப்பாசன நிலப் பரப்பில் மேம்படுத்தப்பட்ட அல்லது புதிதாக நீர்ப்பாசன சேவைகளை வழங்குதல்.<br>• 35,000 ஹெக்டயார் நிலப் பரப்பில் மிகச் சிறந்த மட்டத்திலான நிலப் பாதுகாப்பு/சுட்டிகளை வழங்குதல்.<br>• இலங்கை தொடர்பாக தேசிய நீர் வளங்கள் கொள்கையை அறிமுகப்படுத்துதல்.<br>• 1,100,000 நபர்களுக்கு காலநிலை மாற்றங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளின் ஊடாக பலன்களை வழங்குதல். |

**கருத்திட்ட நோக்கங்களினது மீள் நோக்கமிடுகை (Repurposing) செயற்பாட்டின் கீழ் இயங்குகின்ற பிரதானமான, நடுத்தர அளவிலான மற்றும் சிறு நீர்ப்பாசனக் கருத்திட்டங்களினது துரித மற்றும் அத்தியாவசியமான மறு சீரமைப்புப் பணிகளினது விருத்தி - 2025**

| மாவட்டங்கள் | அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 2025 க்கான திட்டங்களின் எண்ணிக்கை | 2025 ஆம்ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா) | விருத்தி | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதீக (%) | நிதி (ரூ. மில்லியன்) |
| அம்பாறை | 70 | 0 | 217.50 | 100 | 193.14 |
| அனுராதபுரம் | 51 | 0 | 145.00 | 100 | 132.02 |
| பதுளை | 28 | 1 | 107.11 | 98 | 74.02 |
| மட்டக்களப்பு | 37 | 0 | 136.98 | 100 | 130.64 |
| கொழும்பு | 13 | 0 | 40.31 | 100 | 8.43 |
| கம்பஹா | 18 | 0 | 40.31 | 100 | 32.41 |
| களுத்துறை | 23 | 0 | 49.11 | 100 | 29.00 |

| மாவட்டங்கள் | அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | 2025 க்கான திட்டங்களின் எண்ணிக்கை | 2025 ஆம்ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள் (ரூபா) | விருத்தி | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதீக (%) | நிதி (ரூ. மில்லியன்) |
| ரத்தினபுரி | 18 | 0 | 80.52 | 100 | 22.09 |
| கண்டி | 38 | 2 | 132.92 | 96 | 97.92 |
| மாத்தளை | 8 | 0 | 80.52 | 100 | 12.83 |
| நுவரேலியா | 9 | 0 | 40.31 | 100 | 31.10 |
| கேகாலை | 4 | 0 | 46.69 | 100 | 12.42 |
| குருநாகல் | 21 | 0 | 76.56 | 100 | 58.46 |
| அம்பாந்தோட்டை | 26 | 2 | 120.83 | 96 | 95.27 |
| மன்னார் | 30 | 0 | 80.62 | 100 | 68.29 |
| வவுனியா | 72 | 1 | 283.52 | 98 | 162.41 |
| கிளிநொச்சி | 17 | 0 | 80.52 | 100 | 55.72 |
| முல்லைத்தீவு | 88 | 0 | 320.55 | 100 | 270.10 |
| யாழ்ப்பானம் | 13 | 0 | 40.31 | 100 | 35.37 |
| மொனராகலை | 54 | 1 | 112.04 | 98 | 160.53 |
| பொலன்னறுவை | 48 | 1 | 231.13 | 98 | 194.14 |
| புத்தளம் | 31 | 0 | 145.00 | 100 | 126.20 |
| திருகோணமலை | 17 | 0 | 80.52 | 100 | 70.53 |
| காலி | 8 | 0 | 40.31 | 100 | 33.98 |
| மாத்தறை | 29 | 3 | 170.81 | 94 | 116.08 |
| **மொத்தம்** | **771** | **11** | **2,900.00** | | **2,223.09** |

**6. ஒருங்கிணைந்த பிரவேசிப்பு ஊடாக உலர் வலயத்தின் சிறு தோட்ட உரிமையாளர்கள் காலநிலை மாறுபாடுகள் மற்றும் பாதகமான நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறனைக் கட்டியெழுப்பும் நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (CRIWMP)**

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)** | 12,660 இலங்கை ரூபாய் மில்லியன் (52.08 அமெரிக்க டொலர் மில்லியன்) | **பலனடைகின்ற மாவட்டங்கள்** | அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகல், புத்தளம், வவுனியா, மன்னார், திருகோணமலை |
| **நிதி வசதிகள் பெறப்படுகின்ற வழி முறை** | கிரீன் கிளைமேட் ஃபண்ட் / இலங்கை அரசு – இணை நிதியுதவி | **நீர்த்தேக்கத்தின் கொள் திறன் (மில்லியன். சதுர மீற்றர்) / பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்)** | சிறிய குளங்கள் – 325<br>நெல் நிலங்கள் – 5000 ஹெக்டேர் |
| **கருத்திட்ட காலப் பகுதி** | 08 ஆண்டுகள் (ஜூன் 2017 – டிசம்பர் 2025) | **பயனாளிகள்** | 1,950,374 பேர் |
| **2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | 1,200.00 | **நிதி விருத்தி 2025 (ரூபா மில்லியன்)** | பாசன அமைச்சகம் மூலம் – 1174 இலங்கை ரூபாய் மில்லியன்<br>UNDP மூலம் – 121 இலங்கை ரூபாய் மில்லியன்<br>மொத்தம்: 1295 இலங்கை ரூபாய் மில்லியன் |
| **முழு மொத்த நிதி விருத்தி (ரூபா மில்லியன்)** | பாசன அமைச்சக செலவுகள் – 8749<br>UNDP நேரடி செலவுகள் – 3911<br>மொத்தம் :12,660 இலங்கை ரூபாய் மில்லியன் | **மொத்த பௌதீக விருத்தி (%)** | 100 |
| **2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்** | முந்தைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் உட்பட, 42 குளங்களின் மேல்பகுதி மேம்பாட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டது<br>திருகோணமலை மாவட்டத்தில் வேளாண்-தொழில்நுட்ப பண்ணைகள் உருவாக்கப்பட்டது<br>7 பள்ளித் தோட்டங்கள், 100 சந்தை நோக்கமுடைய தோட்டங்கள் மற்றும் 1,300 உணவு பாதுகாப்புத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டது<br>முன்னர் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கான நடவு பொருட்கள் | | |

| | |
|---|---|
| | விநியோகம் செய்யப்பட்டது<br>7 மாவட்டங்களில் யாயா (Yaya) திட்டம் செயல்படுத்தப்பட்டது<br>சிறிய வடிகட்டி அமைப்புகள் உள்ள பள்ளிகளில் பராமரிப்பிற்கு உதவ கூரைத்தள சூரிய மின் அமைப்புகள் நிறுவப்பட்டது<br>20 சிறிய வடிகட்டி அமைப்புகள் நிறுவி செயல்படுத்தப்பட்டது<br>66 ஆழ அளவுக் கருவிகள் நிறுவப்பட்டது<br>ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய பேரிடர் எதிரொலி தயார்நிலை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது<br>மூன்று நதிக் களங்களில் வெள்ள மேலாண்மைக்கான தரநிலை செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) உருவாக்கப்பட்டது<br>பேராதனைப் பல்கலைக்கழகம் திட்ட நடவடிக்கைகளின் தாக்க மதிப்பீடு மேற்கொண்டது<br>காலநிலை நடவடிக்கை கருத்தரங்கு நடத்தி திட்டத்தின் கற்றல்கள் மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டது<br>இறுதி மதிப்பீடு மற்றும் திட்ட நிறைவு அறிக்கை தயாரித்தல் முடிக்கப்பட்டது |
| **2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா மில்லியன்)** | எதுவும் இல்லை |
| **கருத்திட்டம் செயற்படுத்தப்பது வதன் வாயிலாக பெறப்படுகின்ற முழு மொத்த பலன்கள்** | 325 கிராம பாசன அமைப்புகள் (9750 ஹெக்டேர்) மேம்படுத்தப்பட்டு, காலநிலை தாங்குதிறன் கொண்ட வேளாண்மை நடைமுறைகள் விரிவாக்கப்பட்டது<br>520,000 பயனாளர்களுக்கு வேளாண் ஆலோசனைகள் வழங்கப்பட்டது<br>07 கிராம குடிநீர் திட்டங்கள், 16 பெரிய வடிகட்டி அமைப்புகள், 70 சிறிய வடிகட்டி அமைப்புகள் மற்றும் 4000 மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் மூலம் 122,715 பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு வருடம் முழுவதும் பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டது<br>வெள்ளம் மற்றும் வறட்சி ஆகியவற்றுக்கு எதிரான தழுவும் திறனை மேம்படுத்தி 450,000 பயனாளர்கள் பயன் பெற்றனர் |

## 7. நகல்ஸ் மலைத் தொடரில் அபாய நிலைக்கு உள்ளாகியுள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீரூற்றுக்கள் சார்ந்த பிரதேசங்கள் மற்றும் தாழ் நீரேந்து பிரதேசத்தில் வசிக்கின்ற விவசாயிகள் மற்றும் பெருந் தோட்டக் குடி மக்களினது காலநிலை மாற்றங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறனை மேம்படுத்துதல் (பசுமை காலநிலை நிதியம்)

| | | | |
|---|---|---|---|
| **மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா மில்லியன்)** | 14,710.50<br>(GCF - GOSL : 8,800 + GCF - ICRAF : 3,150 + GOSL - CoFi : 2,760)<br>(USD 1 = Rs. 300) | **பலனடைகின்ற மாவட்டங்கள்** | மாத்தளை, கண்டி, அனுராதபுரம், குருணாகலை, புத்தளம் |
| **நிதி வசதிகள் பெறப்படுகின்ற வழி முறை** | பசுமை காலநிலை நிதியம் மற்றும் இலங்கை அரசு | **நீர்த்தேக்கத்தின் கொள் திறன் (மில்லியன். சதுர மீற்றர்) ∴ பயிர்ச் செய்கை நிலப் பரப்பு (ஹெக்டயார்)** | மேல் நீர்ப் பிடிப்பு 166,254 ஹெக்டயார் மற்றும் தாழ் நீர்ப் பிடிப்பு 506,264 ஹெக்டயார்<br>மொத்தம் 672,518 ஹெக்டயார் |
| **கருத்திட்ட காலப் பகுதி** | 6 வருடங்கள் (2023 ஜனவரி 2029 ஜனவரி) | **பயனாளிகள்** | பெண் - 690,015<br>ஆண் - 653,201<br>மொத்தம் 1,343,216 |
| 6 | பணியாளர் பயிற்சி | 0.934 | 30 |
| மொத்தம் | | **35.428** | **185** |

# மகாவலி மதியுரை பணியகம் (MCB)

### தூரநோக்கு

தெற்காசியப் பிராந்தியத்தில் பசுமை அணுகுமுறைகளின் நிலைத்தன்மைக்கு ஆதரவளிப்பதோடு, ஒரு நிலையான பூமியில் முன்னணியில் திகழும் பசுமை தேசமாக உருவெடுத்து, வறுமையற்ற ஒரு இலங்கையை நாங்கள் தொலைநோக்காகக் கொண்டுள்ளோம்.

### பணிப்புரை

எமது பணிப்புரை என்னவெனில், இலங்கையில் கடும் வறுமையை ஒழிப்பதும், வாழத்தகுந்த ஒரு பூமிக்கு ஆதரவளிக்கும் அதேவேளை பொதுவான செழுமையை மேம்படுத்துவதுமாகும். இந்த இலக்கானது ஒன்றோடொன்று தொடர்புடைய பல நெருக்கடிகளால் சவாலுக்கு உள்ளாகியுள்ளது. காலம் மிக முக்கியமானது. தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு நாம் ஒரு புதிய மூலோபாயத்தை வகுக்க வேண்டும்.

**குறிக்கோள்கள்**

i. மீண்டுயிர்ப்புத் திறனை கட்டியெழுப்புதல் - அனைத்துத் திட்டங்களும் இலங்கையின் நிலையான மற்றும் செழிப்பான எதிர்காலத்திற்கு பங்களிப்பதை உறுதி செய்தல்.

ii. நிலைபேறான அபிவிருத்தி - மகாவலி ஆலோசனைப் பணியகத்தின் ஆலோசனைச் சேவைகள், எமது செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் அதிநவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம், நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

iii. விந்தையான யோசனைகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளின் ஊடாக முன்னேற்றத்தை உந்துதல் மூலம், புத்தாக்கமான, நிலைபேறான மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பெறுபேறுகளை வழங்குதல்.

iv. சிறப்பு - திட்டங்களை மேற்கொள்வதற்கும், உயர்தரமான முடிவுகளை வழங்குவதற்கும், சிறந்த தகுதியுள்ள ஆலோசகர்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

v. கூட்டுப்பணி - கூட்டு வெற்றி மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்க, அரசு அமைப்புகள், தனியார் துறைகள் மற்றும் சர்வதேச நிபுணர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் ஒருமித்த ஆற்றலை வளர்த்தெடுத்தல்.

**முக்கியப் பணிகள்**

i. சுற்றுச்சூழல் மதிப்பீடுகள்
ii. வியூகச் சுற்றுச்சூழல் மதிப்பீடு
iii. சமூகத் தாக்க மதிப்பீடுகள்
iv. மீள்குடியேற்றச் செயல் திட்டங்கள்
v. டிஜிட்டல் விவசாயம்
vi. நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள திட்டங்களுக்கான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பணியமர்த்தல்.
vii. வேளாண்மை, உணவு, இயற்கை மற்றும் கிராமப்புற மேம்பாடு
viii. பருவநிலை மாற்றம், மீள்திறன் மற்றும் சுற்றுச்சூழல்
ix. எரிசக்தி
x. பொதுத்துறை மேலாண்மை மற்றும் ஆளுமை
xi. அரசு-தனியார் கூட்டுறவு
xii. மனித மற்றும் சமூக மேம்பாடு
xiii. நிலையான மேம்பாட்டு இலக்குகள்
xiv. நீர் மற்றும் நகர்ப்புற மேம்பாடு
xv. சுற்றுச்சூழல் ஆலோசனை
xvi. அறிவு மேலாண்மை மற்றும் திறன் மேம்பாடு

xvii. நீர் பொறியியல் மற்றும் ஆலோசனை

xviii. ஏற்றுமதி வேளாண்மை மற்றும் மதிப்புச் சங்கிலி மேம்பாடு

**2025-இல் மேற்கொண்ட பணிகள்**

| # | வழங்கப்பட்ட சேவை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | சேவை வழங்கிய நிறுவனம் | ஒதுக்கீடு (ரூபா. மி) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பௌதீக (%) | நிதி (ரூபா. மி) |
| 1 | தாக்க மதிப்பீடு | முதனிலை சுற்றுச்சூழல் ஆய்வு (IEE): அம்பாறை மாவட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள காலகெகந்தியா நீர்த்தேக்கத் திட்டம் | நீர்ப்பாசனத் திணைக்களம் | 3.63 | 85 | 3.09 |
| | | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA): முன்மொழியப்பட்டுள்ள கிண் - நில்வளா திசைதிருப்பல் திட்டம் | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு - நீர்ப்பாசன பிரிவு | 38.85 | 90 | 15.54 |
| | | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA): மா ஓயா வடிநிலத்திலுள்ள யட்டிம ாண நீர்த்தேக்கத் திட்டம் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 5.81 | 90 | 5.24 |
| 2 | சாத்தியக்கூற்று ஆய்வுகள் | மகாவலி நீர் பாதுகாப்பு முதலட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், வணிக ரீதியிலான விவசாய மேம்பாட்டிற்கான (CAD) ஆரம்ப சாத்தியக்கூற்று ஆய்வு | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு - நீர்ப்பாசன பிரிவு | 8.52 | 100 | 5.95 |
| மகாவலி ஆலோசனைப் பணியகத்தினால் (MCB) வழங்கப்படும் விசேட சேவைகள் | | | | | | |
| 1 | நியமச் செயற்பாட்டு நடைமுறைகளைத் தயாரித்தல் | மல்வத்து ஓயா, யான் ஓயா மற்றும் மீ ஓயா ஆகிய ஆறு வடிநிலங்களுக்கான வெள்ள முகாமைத்துவ நியமச் செயற்பாட்டு நடைமுறைகளை (SOPs) தயாரிப்பதற்கான ஒத்துழைப்புச் சேவைகள் | குளங்கள் கிராமங்களின் மறுமலர்ச்சி | 16.92 | 100 | 13.28 |

| # | வழங்கப்பட்ட சேவை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | சேவை வழங்கிய நிறுவனம் | ஒதுக்கீடு (ரூபா. மி) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பௌதீக (%) | நிதி (ரூபா. மி) |
| 2 | நில அளவை மற்றும் எல்லை நிர்ணயம் | அனுராதபுரம், வவுனியா, குருநாகல், புத்தளம், மன்னார், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில்கலையமைப்புகளின் (Cascades) கீழ் உள்ள கிராமிய நீர்ப்பாசன முறைகளுக்குச் சொந்தமான பாதுகாப்பு வலயங்களை நில அளவை செய்வதற்கும் எல்லை நிர்ணயம் செய்வதற்குமான சேவைகள். | குளங்கள் கிராமங்களின் மறுமலர்ச்சி | 283.45 | 88% | 250 |
| 3 | நில அளவை மற்றும் எல்லை நிர்ணயம் | அனுராதபுரம், வவுனியா, குருநாகல், புத்தளம், மன்னார், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில்கலையமைப்புகளின் (Cascades) கீழ் உள்ள கிராமிய நீர்ப்பாசன முறைகளுக்குச் சொந்தமான பாதுகாப்பு வலயங்களை நில அளவை செய்வதற்கும் எல்லை நிர்ணயம் செய்வதற்குமான சேவைகள். | குளங்கள் கிராமங்களின் மறுமலர்ச்சி | 75.85 | 90 | 53.10 |

### 2.1.3 எதிர்கால இலக்குகள்

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| 01. | மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (MWSIP) – கட்டம் I மற்றும் II | 29,000.00 கட்டம II | 35.5 % | 36.3% | • மார் 2.5 கி.மீ. சுரங்கப்பாதை அகழ்வு மற்றும் இரண்டு சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்களை (TBM) அகற்றுதல் உள்ளிட்ட UECP-ICB-2A தொகுப்பின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்தல்.<br>• மினிப்பே - 6 தொகுப்பை நிறைவு செய்து இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் ஒப்படைத்தல்.<br>• PMSC, மேல் மத்திய மாகாணக் கால்வாய் NCPCP-3 மற்றும் NCPCP-4 தொகுப்புகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு 20% முன்பணம் செலுத்துதல். |
| 02 | உமா ஓய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம் | 1,270.00 | 99.98% | 100% | • கருத்திட்டப் பணிகளுக்காக தற்காலிகமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை** மீள் ஏற்றுமதி செய்தல் (re-export)<br>• மீதமுள்ள சிறு பணிகளை நிறைவு செய்தல் |
| 03. | மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்கங்கள் | 80.00 | 99.93% | 100% | • கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து, கருத்திட்ட அலுவலகம் மூடப்பட்டுள்ளது.<br>• லக்கல, எலஹெர, நாவுல, மெதிரிகிரிய மற்றும் கந்தளாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் தொடர்புடையதாக சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக இழப்பீடுகளை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| 04. | காலநிலை தாக்கங்களை குறைப்பதற்கான பன்முக நிலை கருத்திட்டம் (CResMPA) | 9,150.00 | 70% | 85% | • கீழ்வரும் பிரிவுகளை மேம்படுத்துதல்<br>- அதிக தாக்கம் மிக்க வானிலை மற்றும் நீரியல் அனர்த்த நிலைகள் தொடர்பான முன்னெச்சரிக்கை தொகுதிகள்<br>- காலநிலைக்கு முகங் கொடுக்கக் கூடிய திறன் தொடர்பான களனி பள்ளத்தாக்கு பல் நோக்கு நீர் உட் கட்டமைப்பு வசதிகள்<br>• 25 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள அனைத்து நீர்ப்பாசன மறு சீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தல்<br>• டிட்வா சூறாவளியினால் ஏற்பட்ட சொத்து சேதங்கள் குறித்து அவசரகால செயற்பாட்டு உள்ளடக்கம் (CERC - Contingency Emergency Response Component) இன் கீழ் அடையாளம் காணப்பட்ட முழுமையான மறு சீரமைப்பு வகுதிகள் |
| 05 | ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் (IWWRMP) | 5,100.00 | 81.87 % | 91.76 % | • கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்காக 218 நுண் நீரேந்து திட்டங்களை தயாரித்தல்.<br>• பாதஹேவாஹெட்ட, தெல்தொட்ட, ஹங்குரன்கெத மற்றும் மதுரட்ட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளை மேல் மகாவலி நீரேந்து பிரதேசத்தை இலக்காகக் கொண்டு செயற்படுத்துதல்.<br>• அடையாளம் காணப்பட்ட ஆற்று பள்ளத்தாக்குகள் சம்பந்தமாக 04 நிலக் கீழ் நீர் முகாமைத்துவ திட்டங்களை தயாரித்தல்.<br>• நீர் முகாமைத்துவ செயலகத்திற்காக VISTA மாதிரியுருவை மொத்தமாக நீர் ஒதுக்கீட்டில் ஈடுபடுத்துதல்.<br>• நீர் வளக் கொள்கையை தயாரித்து நிறைவு செய்தல். |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | • நீர்ப்பாசன திணைக்களம் - 11 பணி ஒப்பந்தங்களை செயற்படுத்துதல்.<br>• இலங்கை மகவலி அதிகார சபை - 16 பணி ஒப்பந்தங்களை செயற்படுத்துதல்.<br>• வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் - 07 பணி ஒப்பந்தங்களை செயற்படுத்துதல்.<br>• கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் - 10 பணி ஒப்பந்தங்களை செயற்படுத்துதல்.<br>• சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை மறு சீரமைக்கும் பணிகள், மீள் இலக்கிடுகை செயற்பாடுகளின் (அமெரிக்க டொலர் 10 மில்லியன்) கீழ் பணி ஒப்பந்த பெருகை செயற்பாடுகள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் (சுமார் 760 பணி வகுதிகளின் கீழான பணிகள் நிறைவடைந்துள்ளன).<br>• 2026 ஆம் ஆண்டில், அவசரகால செயற்பாட்டுக் கூறின் (CERC) கீழ் ரூபா 1,730 மில்லியன் மதிப்பிலான 18 பணித் தொகுதிகளும், ரூபா 70.5 மில்லியன் மதிப்பிலான 04 மதியுரை சேவை வகுதிகளும் செயற்படுத்தப்படும். |
| 06. | நகல்ஸ் மலைத் தொடர்பில் ஆபத்திற்குள்ளாகியுள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீருற்றுக்கள், நீர் | 3,250.00 | 19.35% | 47% | 2026 ஆம் ஆண்டிற்காக முன் மொழியப்பட்ட செயற்பாடுகள், சுற்றுச் சூழல் தொகுதிகளின் தாங்கு திறனை மேம்படுத்துதல், விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் கருத்திட்டப் பிரதேசத்திற்குள் குடி மக்களினது தழுவிக் கொள்ளும் திறன்களை வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காகத் |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | வீழ்ச்சிகள் சார்ந்த பிரதேசங்கள் மற்றும் தாழ் நீரேந்து பிரதேசங்களில் வசிக்கின்ற விவசாயிகள் மற்றும் பெருந்தோட்ட குடி மக்களினது காலநிலை மாற்றங்களுக்கு முகங் கொடுக்கின்ற திறனை மேம்படுத்துதல் (பசுமை காலநிலை நிதியம்)<br>GCF Knuckles | | | | திட்டமிடப்பட்டுள்ளன. செயற்பாடுகள் பின்வருமாறு பிரதான கருப் பொருள் உள்ளடக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>1. **சுற்றுச் சூழல் தொகுதிகள் மற்றும் நீரேந்து மீள் நிலை நாட்டுகை**<br>• உயிரியல் மற்றும் கட்டமைப்பு ரீதியிலான செயற்பாடுகளின் வாயிலாக 2,000 ஹெக்டயார் அளவிலான கால்வாய்கள்இ ஓடைகள், ஆறுகள் மற்றும் ஆற்றங் கரைகளை பாதுகாத்தல்.<br>• அதிக அபாயமுள்ள பிரதேசங்களில் பாதையோரமாக 5 கிலோ மீற்றர் நீளமான வடிகாலமைப்பு தொகுதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• பங்கேற்பு அணுகு முறையின் வாயிலாக 10 நீர்ப்பாசன வலையமைப்புகள், 20 கிராமிய குளங்கள், 15 குளங்கள் மற்றும் சிறு அணைக் கட்டுகள் (Check Dams) ஆகியவற்றை மறு சீரமைத்தல்..<br>• தனிமைப்படுத்தப்பட்ட சிறிய வனப் பகுதிகளுக்கிடையிலான இடை வெளிகளை நிரப்பும் வகையில் மர நடுகையை மேற்கொண்டு 100 ஹெக்டயார் நிலப் பரப்பை கூட்டிணைத்தல் மற்றும் அழிவடைந்த நிலையிலுள்ள காணிகளை மீள் கட்டமைத்தல்.<br>• நிலச் சுட்டி தொடர்பினை மேம்படுத்தும் பொருட்டு 10 கிலோ மீற்றர் பரப்பளவிலான சுற்றுச் சூழல் வழித் தடங்களை அடையாளமிட்டு நிலை நிறுத்துதல்.<br>• வன பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இலங்கை மகாவலி |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் ஊடாக ஆக்கிரமிப்பு அந்நிய நாட்டுத் தாவர இனங்களை அகற்றுதல் மற்றும் புல் வெளிகளை மீள் நிலை நாட்டும் பொருட்டு 200 ஹெக்டயார் அளவிலான வனாந்திர நிலப் பரப்புகளை மீளுருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>• 20 ஹெக்டயார் அளவிலான சிறு நீரோட்டங்கள், சிறு நீரேந்து பிரதேசங்கள் மற்றும் வன சீவராசிகள் வாழிடங்களை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.<br>• வனாந்திரமயமான மற்றும் புல் வெளிப் பிரதேசங்களுக்கு உரித்தான 50 ஹெக்டயார் நிலப் பகுதியில் புதிய தீத் தடுப்பு பட்டைகளை நிலை நாட்டுதல் மற்றும் ஏற்கனவே நிலவுகின்ற 50 ஹெக்டயார் அளவிலான தீத் தடுப்பு பட்டைகளை பராமரித்தல்.<br>• சுற்றுச் சூழல் நேயமிக்க செயல் வழி முறைகளை பின்பற்றி 300 ஹெக்டயார் அளவிலான வனப் பயிர்ச் செய்கையை மீள் நிலை நாட்டுதல்.<br>• 25,000 நாற்றுகளை உள்ளடக்கிய நாற்றங்கால்களை பராமரித்தல் மற்றும் சுற்றுச் சூழல் ரீதியாக உணர் திறன் மிக்க பிரதேசங்களில் பெயர்ப் பதாகைகளை நிலை நிறுத்துதல்.<br>**2. காலநிலை தாங்கு திறன் கொண்ட விவசாயம் மற்றும் மண் ஆரோக்கிய மேம்பாடு**<br>• 3,000 விவசாயக் குடும்பங்கள் மற்றும் 3,000 ஹெக்டயார் அளவிலான நிலப் பரப்பிற்காக காலநிலை மாற்றங்களை தாங்கக் கூடிய நெல் மற்றும் பிற களத் திடல் பயிர் வகைகளை தெரிவு |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | செய்தல், அறிமுகப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.<br>• நிலையான மண் முகாமைத்துவ செயல் வழி முறைகளை அமுல்படுத்தும் பொருட்டு 3,000 விவசாயக் குடும்பங்களையும், 3,000 ஹெக்டயார் நிலப் பரப்பையும் உள்ளடக்கியதாக மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.<br>• நெற் பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் முகமாக நெல்லை விசிருவதற்குப் பதிலாக நாற்று நடும் வழி முறையை 600 விவசாயிகளிடையே ஊக்குவித்தல்.<br>• கலப்பு, தொடர்ச்சியான (Relay) பயிர்ச் செய்கை மற்றும் வரிசை இடை நடுகை (Alley) போன்ற பயிர்ச் செய்கை முறைகளின் மூலம் பயிர்த் தீவிரத்தை அதிகரிப்பதற்காக பொருத்தமான நெல் மற்றும் ஏனைய களத் திடல் பயிர் (OFC) வகைகளின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை விநியோகித்தல் (3,000 விவசாயிகளுக்கு).<br>• 300 ஹெக்டயார் அளவிலான நெல் வயல்களின் வரப்புகளை ஒருங்கிணைத்தல்.<br>• காலநிலை நன்னெறி மிக்க விவசாயம் மற்றும் மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ உத்திகள் தொடர்பாக 100 அதிகாரிகள் மற்றும் 3,000 விவசாயிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.<br>• இழப்புகளை குறைத்தல் மற்றும் பெறுமதி ஒன்று சேர்வை மேம்படுத்தும் முகமாக அறுவடைக்குப் பிந்தைய விளைச்சல் முகாமைத்துவ நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல். |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | • இயற்கை நீர் வழிகள் மற்றும் வனாந்தர எல்லைப் பகுதிகளில் காணப்படுகின்ற 300 ஹெக்டயார் அளவிலான சேதமடைந்த தோட்ட நிலப் பகுதிகளை மீள் நிலை நாட்டி அவற்றை வினைத் திறன் மிக்க வனாந்திர பகுதிகளாக மாற்றுதல்.<br>• தீவிரப் பயிர்ச் செய்கை மற்றும் ஊட்டச் சத்து நிறைந்த வாழ்வாதார உற்பத்தி தொடர்பாக நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கு வழிகாட்டும் வகையில் 10 தோட்டங்களுக்கான நிலச் சுட்டி மட்டங்களின் கீழ் திட்டங்களை உருவமைத்தல்..<br>• 500 ஹெக்டயார் நிலப் பரப்பில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தின் கீழான தாக்கங்களை குறைக்கும் செயல் நடைமுறை வழி வகைகளை செயற்படுத்துதல்.<br>**3. நிலையான தோட்டப் பயிர்ச் செய்கை மற்றும் விவசாய வனவியல் மேம்பாடு**<br>• 100 ஹெக்டயார் அளவிலான தேயிலை நிலங்களை மேம்படுத்துதல், 20 ஹெக்டயார் அளவிலான சேதமடைந்த தேயிலை நிலங்களை மீள் உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வழி முறைகளுக்கு ஒத்திசைவாக 30 ஹெக்டயார் அளவிலான நிலப் பகுதிகளை மேம்படுத்துதல்.<br>• ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை மற்றும் பழப் பயிர்களுடன் கூட்டிணைந்த இடைப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல்.<br>• குறைவாகப் பயன்படுத்தப்படும் நிலங்களில் வெற்றிடங்களை நிரப்பி பயிரிடுவதற்காக உள்நாட்டு வனத் தாவர இனங்கள், தேயிலை மற்றும் விறகுக்கான மரங்களுக்காக பயன்படுத்துகின்ற |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | தாவரங்கள் தொடர்பாக 4 நாற்றங்கால்களை தோட்டப் பகுதிகளில் நிலை நிறுத்துதல்.<br>4. **பசுமை பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி மற்றும் சந்தை அணுகல்**<br>• விலை கட்டமைப்புகள் மற்றும் பெறுமதிச் சங்கிலி மேம்பாட்டிற்கான சாத்தியக் கூறுகள் (சான்றுபடுத்துகை, தர உறுதிப்படுத்தல், உற்பத்திப் பெறுமதி போன்றவை) ஆகியவற்றை கருத்திற் கொண்டு தேசிய ரீதியிலான பசுமைச் சந்தை மதிப்பீட்டை அணுகுதல்.<br>• மேல் நீரேந்து பிரதேசத்தின் பெறுமதிச் சங்கிலிகளை அடையாளம் காண்பதற்கும், பசுமைச் சந்தை மதிப்பீட்டு ஆய்வுகளை நடாத்தும் பொருட்டும் செயலாக்கத் திறனை கட்டியெழுப்புதல்.<br>• சிறு அளவிலான மற்றும் வாழ்வாதார விவசாயிகளை உள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலிகளை மேம்படுத்தும் முகமாக வழிகாட்டுதல்களை தயாரித்தல்.<br>• சிறு/குறுகிய அளவிலான வணிக நிறுவனங்களாக செயற்படுவதன் ஊடாக பசுமை விருத்தி வாய்ப்புகளிலிருந்து பயனடைவதற்கு விவசாய இயக்கங்களை வலுப்படுத்துதல்.<br>• பயிற்சிகள் மற்றும் பங்குதாரர்களின் ஒத்துழைப்பின் வாயிலாக பெறுமதி ஒன்று சேர் சங்கிலி தொழில் முயற்சிகள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களுக்கிடையிலான விழிப்புணர்வூட்டல் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் வாயிலாக அந்நிறுவனங்களின் நிலைத் தன்மையை மேலுயர்த்துதல். |

| | நிகழ்ச்சித் திட்டம்/ கருத்திட்டம் | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதி ஒதுக்கீடு (மில்லியன் ரூபா) | 2025 ஆம் ஆண்டின் முழு மொத்த விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முழு மொத்த பௌதீக விருத்தி | 2026 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இலக்குகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | 5. **சுற்றுச் சூழல் தொகுதி சேவைகளுக்கான (PES) கட்டணச் செலுத்துகை பொறிமுறை**<br>• மூன்று உப பள்ளத்தாக்குகள் தொடர்பாக சுற்றுச் சூழல் தொகுதி சேவைகளுக்கான கட்டணச் செலுத்தல் தொடர்பான இடை நிலை நிறுவனமொன்றை நிலை நிறுத்துதல்.<br>• குறைந்த பட்சம் இரண்டு சுற்றுச் சூழல் தொகுதி சேவைகளுக்கான கட்டணச் செலுத்தல் பொறி முறைகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்து அவற்றை நடைமுறைப்படுத்தும் செயற் பணிகளை ஆரம்பித்தல்.<br>6. **விரிவான நீரியல் ஆய்வு மற்றும் நீரியல் மாதிரியாக்கல்**<br>• விரிவான நீரியல் ஆய்வு மற்றும் நீரியல் மாதிரியாக்கல் தொடர்பான பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. |

## 2026ஆம் ஆண்டில் நீர்ப்பாசனப் பிரிவினால் செயற்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ள கருத்திட்டங்கள்

- காலநிலை தாக்கங்களுக்கு முகங் கொடுக்கும் மற்றும் நவீனப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன விவசாயத் துரையின் வாயிலாக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் முன்னோடி மாதிரிகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் 2027 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், அதன் ஆரம்ப கட்ட பணிகள் 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- இது நீர்ப்பாசனத் துறை தொடர்பாக குழாய் வழி நீர் விநியோகிப்பு தொகுதியை அறிமுகப்படுத்தும் முன் மாதிரி கருத்திட்டமாக காணப்படுகின்றது. இதன் வாயிலாக நடப்பு நீர் பயன்பாட்டில் ஏற்படக் கூடிய இழப்புகளை 35% இனால் குறைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இதற்காக ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் வளர்ச்சி மற்றும் தாங்கு திறனை மேம்படுத்தும் முகமாக ஜப்பான் நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை குடியரசினால் அமெரிக்க டொலர் 4.98 மில்லியன் ஆன நிதியம் முதலீடு செய்யப்படுகின்றது.

- தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட கிவுல் ஓய நீர்த்தேக்கக் கருத்திட்டம் மற்றும் மாதுரு ஓய வலக் கரை அபிவிருத்தி கருத்திட்டமும் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் 2026 ஆம் ஆண்டிலிருந்து மீளவும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், கிவுல் ஓய நீர்த்தேக்க கருத்திட்டத்திற்கு ரூபா 2500 மில்லியனும், மாதுரு ஓய வலக் கரை அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு ரூபா 1000 மில்லியனும் ஆன தொகை 2026 ஆம் ஆண்டில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| | |
|---|---|
| ………………………………………… | ………………………………………… |
| **பணிப்பாளர் (திட்டமிடல்)** - | **செயலாளர்** - |
| திட்டமிடல் மற்றும் செயற்படுத்துகை பிரிவு - நீர்ப்பாசன பிரிவு | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு |
| ஒப்பம் | ஒப்பம் |

# 03 அத்தியாயம் - 2025 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1. நிதிச்செயலாற்றுகைப்பற்றியகூற்று

**ஏசீஏ - எப்**

2025 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**ரூபா.**

| வ.செ.திட்டம் (2025) | | | உண்மையான 2025 | 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | - | - | |
| | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர்பொருட்கள்,சேவைகளுக்கான வரி | 2 | - | - | ACA-1 |
| - | சர்வதேச வர்த்தகம்மீதான வரி | 3 | - | - | |
| 1,443,000,000 | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | 1,939,987,603 | 86,430,015 | |
| 1,443,000,000 | **மொத்த வருமான பெறுகைகள் (அ)** | | **1,939,987,603** | **86,430,015** | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி முற்பணம் | | 36,319,927,056 | 22,762,348,930 | ACA-3 |
| - | வைப்புகள் | | 1,560,218,838 | 96,911,906 | ACA-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 199,548,906 | 108,271,180 | ACA-5 |
| - | வேறு பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)** | | **38,079,694,800** | **22,967,532,016** | |
| - | மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ=(அ )+(ஆ) | | 40,019,682,403 | 23,053,962,031 | |
| | திறைசேரிngWif **(ஈ)** | | 2,566,748,234 | 159,254,397 | |
| - | **நிகரவருமான பெறுகைகள்மற்றும்வருமானமல்லாத பெறுகைகள்உ=(இ) - (ஈ)** | | **37,452,934,169** | **22,894,707,634** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டெழும் செலவினம்** | | **-** | **-** | |
| 3,250,950,000 | வேதனாதிகள் ,சம்பளங்கள், பிறஊழிய நன்மைகள் | 5 | 3,223,052,555 | 2,540,698,945 | |
| 696,800,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 508,428,281 | 656,110,596 | ACA2(ii) |
| 49,523,900,000 | உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள் | 7 | 48,853,904,632 | 48,459,517,438 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| 1,350,000 | ஏனைய மீண்டெழும் செலவினம் | 9 | 426,458 | 183,374 | |
| 53,473,000,000 | **மொத்த மீண்டெழும் செலவினம்(ஊ)** | | **52,585,811,926** | **51,656,510,353** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 6,701,600,000 | மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும்மேம்பாடு | 10 | 2,898,750,681 | 56,441,952 | |
| 53,642,213,093 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல் | 11 | 32,015,726,471 | 4,112,529,144 | |
| 25,011,850,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 17,781,152,264 | 8,811,486,846 | ACA-2(ii) |
| 1,730,000,000 | நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல் | 13 | 1,463,676,399 | 1,947,579,800 | |
| 37,500,000 | திறன் மேம்பாடு | 14 | 25,490,468 | 5,034,812 | |
| 15,754,150,000 | பிற மூலதன செலவுகள் | 15 | 11,734,321,850 | 10,212,201,739 | |
| 102,877,313,093 | **மொத்த மூலதன செலவினம் (எ)** | | **65,919,118,133** | **25,145,274,293** | |
| | **வைப்புக்கொடுப்பனவு** | | 591,718,713 | 89,778,157 | ACA-4 |
| | **முற்பணக்கொடுப்பனவு** | | 252,911,897 | 219,295,950 | ACA-5 |
| | **பிரதான பேரேட்டு செலவுகள் (ஏ)** | | **844,630,610** | **309,074,107** | |
| | **மொத்த செலவினம் ஐ=(ஊ + எ + ஏ)** | | **119,349,560,668** | **77,110,858,753** | |
| - | **டிசம்பர் 31 ஆம் தேதிய இருப்பு ஏ =( இ - எ)** | | **(81,896,626,499)** | **(54,216,151,119)** | |
| | **தொடக்க இருப்புநிலைக் குறிப்பின்படி மீதி** | | **(81,896,626,499)** | **(54,218,905,365)** | ACA-7 |
| | **டிசம்பர் 31 இல் முற்பண மீதி** | | - | **2,754,245** | ACA-3 |
| | | | - | - | |

## 3.2. நிதிநிலைமைபற்றியகூற்று

2025 டிசம்பர் 31அன்றுள்ளவாறுநிதிநிலைமைபற்றியகூற்று ஏசீஏ–பீ

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசிஏ-6 | 129,158,836,914 | 4,111,761,351 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசிஏ-5/5(ஏ) | 390,829,393 | 337,466,402 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசிஏ-3 | - | 2,754,245 |
| **மொத்த சொத்துக்கள்** | | **129,549,666,307** | **4,451,981,998** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (837,117,180) | 206,093,422 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 129,158,836,914 | 4,111,761,351 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | 63,000,000 | 63,000,000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 1,164,946,573 | 68,372,979 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 2,754,245 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **129,549,666,307** | **4,451,981,997** |

பக்க இலக்கம் 8....... முதல் 59.... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 60... முதல் 225 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ....................... | ....................... | ....................... |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்கா பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 2026.02.26. | திகதி : 2026.02.26 | திகதி : 2026.02.26 |

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

Saman Seal
D.K.T. Samanmali
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation
(Agriculture Division)
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Road, Battaramulla.

## 3.3. காசுப்பாய்ச்சல்பற்றியகூற்று

*ஏசீஏ-சீ*

### 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கானகாசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2025 (ரூபா)** | **2024 (ரூபா)** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 561,411,246 | 192,983,847 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 36,319,927,056 | 22,762,348,930 |
| முற்பணங்களை அறவிடல் | 245,469,771 | 88,551,601 |
| வைப்புக்களின் பெறுகை | 1,560,218,838 | 96,911,906 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **38,687,026,911** | **23,140,796,284** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 2,637,629,588 | 2,553,780,522 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 2,600,816,082 | 15,176,218,129 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 234,171,203 | 58,871,340 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 2,566,748,234 | 159,254,397 |
| முற்பணக் கொடுப்பனவு | 263,725,680 | 146,641,299 |
| வைப்புக் கொடுப்பனவு | 591,718,713 | 89,778,157 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **8,894,809,500** | **18,184,543,844** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ)-(ஆ)** | **29,792,217,411** | **4,956,252,440** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **-** | **-** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதன செலவினம் | 29,792,217,411 | 4,953,498,195 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **29,792,217,411** | **4,953,498,195** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ)** | **(29,792,217,411)** | **(4,953,498,195)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)ஸ்ரீ(இ)(ஊ)** | **-** | **2,754,245** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **-** | **-** |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | - | - |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஸ்ரீ(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஸ்ரீ(எ)ꠂ(ஒ)** | - | **2,754,245** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

## 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### அறிக்கையிடலின் அடிப்படை

**1. அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

இந்த நிதிநிலை அறிக்கைகள் அரசாங்க நிதி ஒழுங்குமுறைகள் 150 & 151 மற்றும் 16.12.2024 தேதியிட்ட மாநில கணக்குகள் வழிகாட்டுதல் எண். 06/2024 ஆகியவற்றின் படி தயாரிக்கப்பட்டுள்ளன.

**2. அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

**3. வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

**4. சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

**5. சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

**6. காசு மற்றும் காசுக்குச் சமனான**

காசு மற்றும் காசுக்குச் சமனான வகுதியில், 2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள் நாட்டு பணத் தாள்கள் மற்றும் நாணயங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன.

அறிக்கையிடப்படும் நிறுவனத்தில் விசேடமான கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுகையில் அத்தகைய தகவல்கள் அரசாங்க கணக்குத் திணைக்களத்தின் அனுமதியுடன் கூடியதாக நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடக்கலாம். அவ்வாறே, அக் கொடுக்கல் வாங்கல்கல் தொடர்பான கலந்துரையாடல் "அறிக்கையிடும் அடிப்படை" எனும் வகுதியின் கீழ் உள்ளடக்கலாம்.

அறிக்கையிடும் அடிப்படையில் எனும் வகுதியின் கீழ் அறிக்கையிடும் நிறுவனத்துடன் தொடர்புடைய கணக்கிடல் கொள்கைகளை மாத்திரம் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

### 3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா.,000

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை | இறுதி வருமான மதிப்பீடு % |
| 2003.08.00 | நீர் மின்சாரம் விற்பனை | 1,333,000.00 | 1,333,000.00 | 1,871,714.60 | 40% |

### 3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. ,000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 4,767,000.00 | 4,999,165.00 | 4,924,429.00 | 98.51% |
| மூலதனம் | 57,930,000.00 | 57,930,000.00 | 34,407,322.60 | 59.39% |
| **மொத்தம்** | **62,697,000.00** | **62,929,165.00** | **39,331,751.60** | **62.50%** |

### 3.7.நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா.,000

| | தொடர் இலக்கம் | நிதி ஒதுக்கீடு பெற்றப்பட்ட அமைச்சு / திணைக்களம் | நிதி ஒதுக்கீடு | | உண்மையான செலவு | இறுதி நிதி ஒதுக்கீட்டின் படியான நிதி ஒதுக்கீட்டுப் பயன்பாடு % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | உண்மையான | இறுதி | | |
| 1 | ஜனாதிபதி அலுவலகம் | Clean Sri Lanka திட்டத்திற்காக | 175,000.00 | 70,655 | 104.34 | 40% |

### 3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா. 000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 2025.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | 2025.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | | | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | | | | |
| 9153 | காணி | | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | | | |
| 9180 | குத்தகைசொத்துக்கள் | | | | |

*2025 ஆம் ஆண்டிலிருந்து நீர்ப்பாசன பிரிவு 118 செலவினத் தலைப்பின் கீழான உப பிரிவாக காணப்படுவதால், 2025 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் மீதிகளை கையளிப்பதற்கு வாய்ப்பு காணப்படுவதில்லை

### 3.9. கணக்காய்வாளர்நாயகத்தின்அறிக்கை

அறிக்கை இணைப்பு IV ஆக இணைக்கப்பட்டுள்ளது

## 4. அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டி

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி (செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில்)

| குறிப்பான சுட்டி | எதிர்ப்பார்க்கப்படுகின்ற முடிவுப் பொருளின் விகிதம் (%) ஆக உண்மையான முடிவுப் பொருள் | | | |
|---|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** | **05% - 49%** |
| 01. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (MWSIP) | | | | ✓ |
| • மொரகஹகந்தவிலிருந்து ஹுருலு வெவ, மான்னங்கட்டிய, ஏரு வெவ மற்றும் மஹ கனதராவ வரை வட மத்திய மாகாண கால்வாயை (மேல் எலஹெர கால்வாய்) நிறைவு செய்தல் | | | ✓ | |
| • வட மேல் மாகாண கால்வாய் கருத்திட்டத்தை நிறைவு செய்தல் | | | | ✓ |
| • மினிபே இடக் கரை கால்வாய் மறு சீரமைப்பு கருத்திட்டத்தை நிறைவு செய்தல் | ✓ | | | |
| 02. உமா ஒய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தை நிறைவு செய்தல் | ✓ | | | |
| 03. மொரகஹகந்த களு கங்கை நீர்த்தேக்க கருத்திட்டம் | ✓ | | | |
| 04. காலநிலை தாக்கங்களைத் தணிக்கும் பல் நோக்கு நிகழ்ச்சித் திட்ட பிரவேசிப்பு(CResMPA) | | | ✓ | |
| 05. ஒருங்கிணைந்த பிரவேசிப்பு ஊடாக உலர் வலயத்தின் சிறு தோட்ட உரிமையாளர்கள் காலநிலை மாறுபாடுகள் மற்றும் பாதகமான நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறனைக் கட்டியெழுப்பும் நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (CRIWMP) | | ✓ | | |
| 06. ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP) | ✓ | | | |
| 07. இலங்கையில் நகல்ஸ் மலைத் தொடரின் நீரேந்து பிரதேசத்தில் அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய ஆற்றுப் படுக்கைகளில், நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் தாழ் ஆற்றுப் படுக்கைகளில் குடியேறியுள்ள விவசாயிகளினதும், விவசாயக் குடி மக்களினதும் காலநிலைக்கு முகங் கொடுக்கும் திறனை வலுவூட்டுதல் - (GCF நகல்ஸ் கருத்திட்டம்) | | | | ✓ |

## 5. அத்தியாயம்- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1. இனங் காணப்பட்ட தொடர்புடைய பேண் தகு அபிவிருத்தி நோக்கங்களைக் குறிப்பிடவும்

| இலக்கு / நோக்கம் | இலக்குகள் | வெற்றிகள் தொடர்பான சுட்டிகள் | இது வரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் விருத்தி (%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50 - 74 | 75 - 100 |
| நோக்கம் : 1<br>அனைத்து திக்கிலும், அனைத்து வகையிலும் காணப்படுகின்ற ஏழ்மையை இல்லாதொழித்தல்.<br><br>நோக்கம் : 2.1<br>வரட்சியைப் போக்குதல் மற்றும் குறிப்பாக சிறார்களும் உள்ளடங்களாக ஏழ்மையில் வாடுகின்ற மற்றும் அபாய நிலைக்கு உள்ளாகியுள்ள குடி மக்கள் பாதுகாப்பு மிக்க, போசாக்கு மிக்க, போதியளவான உணவுகளை வருடம் முழுதும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருப்பதை உறுதிப்படுத்துதல்.<br><br>நோக்கம் : 2.2<br>ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள் தொடர்பாக குள்ளமாகுதல் மற்றும் போசாக்கு குறைவடைதல் தொடர்பாக சர்வதேச ரீதியான இணக்கம் காணப்பட்ட இலக்குகளை 2025 ஆம் ஆண்டளவில் எய்துவதையும் நோக்கமாகக் கொண்டதாக அனைத்து வகையான மந்த போசாக்கு நிலைகளையும் போக்குதல் மற்றும் புதிய இளம் பெண் பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வயது முதிர்ந்த நபர்களது போசாக்குத் தேவைக்கு தீர்வுகளை வழங்குதல் | இலக்கு : 01<br>விவசாயக் காணிகளில் நீரைப் பயன்படுத்துவதன் வினைத் திறனை மேலுயர்த்துதல் | சுட்டி : 01<br>நீர்ப்பாசனத் தொகுதியின் வினைத் திறனை மேலுயர்த்தும் சத விகிதம்,<br>மேம்படுத்தப்பட்ட நீர்ப்பாசன தொழில் நுட்பத்துடன் கூட்டிணைந்த நீர்ப்பாசன பயிர்ச் செய்கை காணிகளின் நீர்ப் பயன்பாடு குறைவடையும் சத விகிதம் | √ | | |
| | இலக்கு : 02<br><br>தலைமை மற்றும் நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களில் நீரைக் களஞ்சியப்படுத்தக் கூடிய கொள் திறனை மேலுயர்த்துதல் மற்றும் காலநிலை மாற்றங்களினாலான தாக்கங்களை முகாமைத்துவபடுத்தும் பொருட்டு நீரை ஒன்று சேர்க்கும் இடங்களை கட்டியெழுப்புதல். | சுட்டி : 02<br>வரட்சி நிலவுகின்ற கால கட்டத்தில் தொகுதியின் நெகிழ்வுத் தன்மையை மேலுயர்த்தும் சத விகிதம், வெள்ளப் பெருக்கு காரணமாக ஏற்படக் கூடிய அழிவுகள் குறைவடையும் சதவிகிதம் | | √ | |
| | இலக்கு : 03<br><br>தலைமை மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் கீழான காணிகளின் பயிர்ச் செறிவை அதிகரித்தல். | சுட்டி : 03<br>நீர் வளங்கள் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவப் பொறிமுறையை செயற்படுத்தும் பொருட்டு விவசாயக் குடிகளை வலுவூட்டும் சத விகிதம் | | √ | |

| இலக்கு / நோக்கம் | இலக்குகள் | வெற்றிகள் தொடர்பான சுட்டிகள் | இது வரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் விருத்தி (%) | | |
|---|---|---|---|---|---|
| | | | **0 - 49** | **50 - 74** | **75 - 100** |
| நோக்கம் : 2.3<br>சிறு அளவிலான உணவுற்பத்தியாளர்களது, குறிப்பாக மகளிரது, உள் நாட்டுக் குடி மக்களது, விவசாயக் குடும்பங்கள் மற்றும் மீனவர்களது விவசாய வினைத் திறன் மற்றும் வருமானம், காணிகளுக்குப் பாதுகாப்பாகவும், சமமான வகையிலும் பிரவேசிக்கக் கூடிய வாய்ப்புகள், ஏனைய உற்பத்தி வளங்கள் மற்றும் கையளிப்புகள், அறிவுத் திறன், நிதிச் சேவைகள், சந்தை மற்றும் பெறுமதி ஒன்று சேர்க்கை மற்றும் பண்ணைகளற்ற தொழில் வாய்ப்புகளுக்கு இட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திறனை இரண்டு மடங்காக்குதல்.<br><br>நோக்கம் : 6.4<br>அனைத்துத் துறை சார்ந்ததாகவும் நீரை வினைத் திறன் மிக்கதாக பயன்படுத்தப்படுவதை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தல், பேண்தகு வகையில் நீரை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் விநியோகிப்பு, நீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டும் நீர்த் தட்டுப்பாட்டினால் அவதிப்படுகின்ற குடி மக்களது எண்ணிக்கயை படிப்படியாகக் குறைத்தல்.<br><br>நோக்கம் : 6.5<br>தேச எல்லைகளினூடாக ஏற்படக் கூடிய கூட்டிணைப்பை பொருத்தமான வகையில் பயன்படுத்திய வண்ணம் ஒருங்கிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவத்தை அனைத்து மட்டங்களிலும் முன்னெடுத்தல். | இலக்கு : 04<br><br>காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய வருடாந்த வெள்ளப் பெருக்கு அழிவுகளைக் குறைத்தல் | சுட்டி : 04<br><br>நீரேந்துப் பிரதேச முகாமைத்துவம் தொடர்பாக நிறுவன சட்டகத்தை நிலை நாட்டுதல், நீரை களஞ்சியப்படுத்தக் கூடிய இடப் பரப்பின் அளவை அதிகரிக்கும் சதவிகிதம், வெள்ளப் பெருக்கு தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றும் சத விகிதம் | √ | | |
| | இலக்கு : 05<br>நாட்டின் குடி நீர், விவசாயத் துறை மற்றும் ஏனைய நோக்கங்கள் தொடர்பாக மேலதிக நீர் வளங்கள் எனும் அடிப்படையில் தரமுயர்ந்த மற்றும் நிலக் கீழ் நீர் வளங்கள் போதியளவில் காணப்படுவதாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல். | சுட்டி : 05<br>நிலக் கீழ் நீர் வளங்கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் முகாமைத்துவப்படுத்துகை தொடர்பான நம்பிக்கைத் தன்மை (%) | √ | | |
| | இலக்கு : 06<br>முழு மொத்த நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பாகவும் நிலக் கீழ் நீர் வளங்கள் முகாமைத்துவப் பொறிமுறையைத் தயாரித்தல். | சுட்டி : 06<br>நாட்டினுள் காணப்படுகின்ற நிலக் கீழ் நீர் வளங்களை மதிப்பிடுதல், பாதுகாத்தல், பயன்படுத்துதல் மற்றும் விருத்தி செய்யும் செயன் முறையை மேலுயர்த்துதல் (%) | √ | | |

| இலக்கு / நோக்கம் | இலக்குகள் | வெற்றிகள் தொடர்பான சுட்டிகள் | இது வரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் விருத்தி (%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50 - 74 | 75 - 100 |
| நோக்கம் : 9.1<br>பொருளாதார விருத்தி மற்றும் மானிட நழ் வாழ்வு தொடர்பாக அனைவருக்கும் பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் பிரவேசிக்கக் கூடிய நிலை காணப்படுதல் எனும் விடயத்தைக் கருத்திலெடுத்த வண்ணம் வலய ரீதியான மற்றும் தேசிய தேச எல்லைகளிடையே மேற்கொள்ளப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளடங்களாக தரமுயர்ந்த அடிப்படையில் அதி கூடிய நம்பிக்கை ரீதியாக பேண்தகு மற்றும் அனர்த்த நிலைகளுக்கு முகங் கொடுக்கக் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.<br><br>நோக்கம் : 9.4<br>உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் தொழிற் துறையை பேண்தகு தன்மை மிக்கதாக்கும் பொருட்டு புதிய தொழில் நுட்பங்களின் ஊடாக விருத்தியை முன்னெடுத்தல் மற்றும் கைத்தொழில் செயன் முறையின் போது வளங்களை வினைத் திறன் மிக்கதாகப் பயன்படுத்தும் செயன் முறையை விருத்தி செய்தல் மற்றும் சுத்தமான மற்றும் சுற்றுச் சூழலுக்கு பொருத்தமான தரமுயர்ந்த உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அனைத்து நாடுகளும் தம் வசமுள்ள திறனின் அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்<br><br>நோக்கம் : 12.2<br>இயற்கை வளங்களை பேண்தகு வகையில் | இலக்கு : 07<br>விவசாயக் குடிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டுத் தன்மையின் ஊடாக நீர்ப்பாசன நீரின் விவசாய உற்பத்தி அலகொன்றின் விளைச்சலை மேலுயர்த்துதல். | சுட்டி : 07<br>சிறு போகத்தினுள் 4.4 ஏக்கர் அடிகள் மற்றும் பெரும் போகத்தில் 3.09 ஏக்கர் அடிகள் நீர்ப் பயன்பாட்டைப் பேணும் பொருட்டு காணிகளைத் தயார்ப்படுத்துவதற்கு மழை நீரை பயன்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசனத்துக்கான நீர்த் தேவையைக் குறைத்தல். | √ | | |

| இலக்கு / நோக்கம் | இலக்குகள் | வெற்றிகள் தொடர்பான சுட்டிகள் | இது வரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் விருத்தி (%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50 - 74 | 75 - 100 |
| முகாமைத்துவப்படுத்துதல் மற்றும் வினைத் திறன் மிக்க பயன்பாடு தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.<br><br>நோக்கம் 13.1<br>அனைத்து நாடுகளினதும் காலநிலை தொடர்பான அனர்த்தங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கின்ற மற்றும் அத்தகைய நிலைகளுக்கு முகங் கொடுக்க கூடிய திறனை வலுப்படுத்துதல். | | | | | |
| நோக்கம் : 6.1<br>அனைவருக்கு சமமான தன்மையுடன் கூடியதாக பாதுகாப்பு மிக்க மற்றும் குறைந்த விலையில் குடி நீரை விநியோகிக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல். | இலக்கு : 01<br>இயைபாக்க ஊடு புகு தன்மை (Reverse Osmosis) மரக் கன்றுகள் மற்றும் மழை நீரை பெற்றுக் கொள்ளக் கூடிய பொறிமுறையை மீள் நிலை நாட்டுதல் | சுட்டி : 01 | √ | | |
| நோக்கம் : 6.6<br>மலைகள், வனாந்திரமயமான, ஈர நிலங்கள், ஆறுகள், நிலக் கீழ் நீர் மற்றும் புற் தரைகள் உட்பட நீருடன் கூட்டிணைந்த உயிரியல் தொகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் மீள் நிலை நாட்டுதல் | இலக்கு : 01<br>நீரினுள் மூழ்கின்ற காணிகளுக்கு நட்ட ஈடாக மரக் கன்றுகளை நடுதல், மேல் நீரேந்துப் பிரதேச முகாமைத்துவம் | சுட்டி : 01<br>மேல் நீரேந்துப் பிரதேசங்களை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல், மீள் வன வளர்ப்பு, மண்ணரிப்புக் கட்டுப்பாடு, நீர்த்தேக்கங்களின் வண்டல் படிவதைக் குறைத்தல் (%) | √ | | |
| நோக்கம் : 7.1<br>அனைவருக்கும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய நம்பகரமான நவீன வலுச் சக்தி தோற்றுவாய்களுக்கு பிரவேசிக்கக் கூடியதாகவிருப்பதாக உறுதிப்படுத்துதல்.<br><br>நோக்கம் 7.2<br>உலக வலுச் சக்தி மூலாதாரங்களின் கீழ் புதுப்பிக்கத்த வலுச் சக்தி பாகங்களை மேலுயர்த்துதல். | இலக்கு : 01<br>நீர்ப்பாசனத் தொகுதிகளில் நீர் மின் வலு நிலையங்களை அறிமுகப்படுத்துதல். | சுட்டி : 01<br>நீர் மின் வலு ஒன்று சேர்வதால் மின்சாரத் தொகுதிக்கு ஒன்று சேர்கின்ற மின்சாரத்தின் அளவு (கிகா வொட் மணித்தியாலம்) | √ | | |

| இலக்கு / நோக்கம் | இலக்குகள் | வெற்றிகள் தொடர்பான சுட்டிகள் | இது வரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் விருத்தி (%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50 - 74 | 75 - 100 |
| நோக்கம் 7.3 உலக வலுச் சக்தியை வினைத் திறன் மிக்கதாக்கும் விகிதாசாரத்தை இரண்டு மடங்காக்குதல். | | | | | |

**குறிப்பு :**

இன்றளவில், நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) எய்துகையில் ஆண்டுதோறும் செயற் திறனை மதிப்பிடுவதற்கு சீரான பொறிமுறை காணப்படுவதில்லை. மேலும், வெற்றி சார்ந்த விருத்தி நிலையின் சதவீதத்தை சுட்டிக் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் மூன்று மாதிரி அளவீட்டு வரம்புகளும், நீர் சார் துறையில் பல்வேறு செயற்பாடுகளை செயற்படுத்துவதன் ஊடாக ஒரு வருடத்தில் பெற்றுக் கொண்ட உண்மையான, முன்னேற்றத்தின் அடிப்படையிலான விருத்தி தொடர்பாக போதியளவில் பிரதிபலிக்கப்படுவதில்லை. SDG விருத்தி நிலையை துல்லியமாக மதிப்பிடுவதற்கும், வருடாந்த அடிப்படையில் வளர்ச்சி விருத்தி நிலையை அறிக்கையிடுவதற்கும் விரிவான ஆய்வு அவசியம் எனும் விடயம் தெளிவாகியுள்ளது. எவ்வாறாயினும், ஒவ்வொரு வருடமும் இத்தகைய விரிவான ஆய்வுகளை மேற்கொள்வது நடைமுறைக்கு உகந்த நிலையிலின்றியும், பயனற்ற அடிப்படையிலும் இருக்கலாம்.

எனினும், நீர்ப் பிரிவின் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிபுணர்களினால் வழங்கப்படுகின்ற உள்ளீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வின் மூலம், ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு (UNEP) அறிக்கையிடுகின்ற நிலையான அபிவிருத்தி இலக்குகள் 6.5.1 உடன் தொடர்புடைய ''ஒருங்கிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவம்'' எனும் வகுதியை செயற்படுத்துதல் தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பான சுருக்கம் இணைப்பு 01 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இன்றளவில் 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 5.2. பேண் தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள்:

- அனுபவம் மற்றும் அறிவு பூர்வமான தொழில்நுட்ப பணிக் குழுக்கள் வெளி நாடுகளுக்கு இடம் பெயர்ந்தமை காரணமாக ஏற்பட்ட பணிக் குழுத் தட்டுப்பாடு.
- வன ஒதுக்கீடுகள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களின் பாதுகாப்பு தொடர்பாகப் போதியளவான சட்ட ரீதியான கொள்கைகள் காணப்படாமை.

# 6. அத்தியாயம் - மனித வள விபரம்

## 6.1. பதவியணிமுகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவிவெற்றிடம்/ (அதிகப்படியான) ** |
|---|---|---|---|
| சிரேட்ட | 58 | 37 | 21 |
| மூன்றாம்நிலை | 05 | 03 | 02 |
| இரண்டாம்நிலை | 266 | 238 | 28 |
| ஆரம்பநிலை | 58 | 37 | 21 |
| **மொத்தம்** | **387** | **315** | **72** |

## 6.2.** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக

மேலே 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அனைத்துத் தரங்களுக்கும் உரிய அதிகாரிகள் சார்ந்ததாக பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக, ஒவ்வொரு பதவிக்கும் உரித்தான உத்தியோகபூர்வ பணிகளை செயற்படுத்துகையில் சிரமங்கள் ஏற்படுதல், சேவை செயற் திறன் குறைவதற்கு ஏதுவாக அமையும்.

## 6.3. மனிதவளஅபிவிருத்தி

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு (ரூபா 000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள் நாட்டு / வெளி நாட்டு) | வெளிப்பாடு / பெறப்பட்ட அறிவுத் திறன் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| 1 | நீர் வளங்கள், சுற்றுச் சூழல் பொறியியல் துறை மற்றும் முகாமைத்துவப் பாட நெறி | 01 | 02 ஆண்டுகள் | 457,000 | | உள் நாட்டு | அலுவலகப் பணிகளை வினைத் திறன் மிக்கதாகவும், துல்லியமாகவும், பயனுள்ளதாகவும் முன்னெடுப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சிகள் பெரிதும் பங்களிப்பு செய்தன. |
| 2 | சம்பளம் தயாரித்தல் | 02 | 03 நாட்கள் | 36,000 | | உள் நாட்டு | |
| 3 | தனிப்பட்ட கோப்புகள் | 04 | 03 நாட்கள் | 7,000 | | உள் நாட்டு | அலுவலகப் பணிகளை வினைத் திறன் மிக்கதாகவும், |
| 4 | சாரதி பயிற்சி | 04 | 01 நாள் | 4,000 | | உள் நாட்டு | |

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை | மொத்த முதலீடு (ரூபா 000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள் நாட்டு / வெளி நாட்டு) | வெளிப்பாடு / பெறுப்பட்ட அறிவுத் திறன் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| 5 | அரச வாகன பராமரிப்பு | 02 | 01 நாள் | 13,000 | | உள் நாட்டு | துல்லியமாகவும், பயனுள்ளதாகவும் முன்னெடுப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சிகள் பெரிதும் பங்களிப்பு செய்தன. |
| 6 | அலுவலக நடைமுறைகள் | 50 | 01 நாள் | 19,000 | | உள் நாட்டு | |
| 7 | வருடாந்த பொருட் கணிப்பீடு | 04 | 02 நாட்கள் | 48,000 | | உள் நாட்டு | |
| 8 | உள்நாட்டலுவல்கள் அலகு மற்றும் அதன் செயற் பணிகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் | 150 | 01 நாள் | 50,300 | | உள் நாட்டு | |
| 9 | இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் கீழான விசாரணை | 06 | 01 நாள் | 39,000 | | உள் நாட்டு | |
| 10 | லீவு விடயம் பொறுப்புள்ள அலுவலர்களின் பணிப் பொறுப்புகள் | 14 | 01 நாள் | 91,000 | | உள் நாட்டு | |
| 11 | மன உளைச்சல் முகாமைத்துவம் | 0 | 01 நாள் | 71,605 | | உள் நாட்டு | |
| 12 | வணிக முகாமைத்துவம் | 6 | 02 நாட்கள் | 7,000 | | உள் நாட்டு | |
| 13 | அரச வாகன பராமரிப்பு | 3 | 01 நாள் | 19,500 | | உள் நாட்டு | |
| 14 | கணக்கியல் | 60 | 01 நாள் | 82,676 | | உள் நாட்டு | |
| 15 | அலுவலக நடைமுறைகள் | 10 | 02 நாட்கள் | 120,000 | | உள் நாட்டு | |

## 7. அத்தியாயம் - இணைக்கப்பாட்டு அறிக்கை

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **01** | **பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் ) வர்த்தக முற்பணக் கணக்குகள் | பொருந்தாது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | பொருந்தாது | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | பொருந்தாது | | |
| 1.6 | ஏனைய | | | |
| **02** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி .பி .445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS)தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன் மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி .பி .135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை | இணக்கமானது | | |
| **04** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி | இணக்கமானது | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| | செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | | | |
| **05** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| **6** | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134 (2) டி.எம்.ஏ/1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப் பகுதியினுள் பதில் வழங்கப்பட்டிருத்தல். | இணக்கமற்றது | வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் ஏறத்தாழ 80% ஆன அறிக்கைகளுக்கு ஒரு மாத காலப் பகுதியினுள் பதில்கள் வழங்கப்படவில்லை. | பதில்களை பெற்றுக் கொள்ளும் முகமாக<br>- நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல்<br>- இது குறித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் அறிவூட்டுதல் |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 7.1 | டி எம் ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **8** | ஆதன முகாமைத்துவம் | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமற்றது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழு வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியானநடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 9.2 | பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள், 06 மாத காலப் பகுதியில் அகற்றப்பட்டிருத்தல் | இணக்கமற்றது | நீர்ப்பாசனப் பிரிவிற்கு உரித்தான வாகனங்கள், சேவைத் தேவைகளின் அடிப்படையில் பல்வேறு நிறுவனங்களின் கீழ் பயன்படுத்தப்படுவதன் காரணமாகவாகும். | தொடர்புடைய சுற்றறிகைகளின் பிரகாரம் குழுக்களை நியமித்து எதிர் வரும் செயற் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி .பி . 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2106/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல் | இணக்கமற்றது | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக மீளவும் பரீட்சிக்கும் முகமாக தேவையான எதிர் வரும் செயற் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படும் | இணக்கமானது | | |
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல் | இணக்கமானது | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல் | இணக்கமானது | | |
| 11.2 | நி .பி .94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி .பி .571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14** | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி .பி .371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 14.3 | நி .பி .371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| **15** | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| 15.3 | நி .பி .176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **17** | **பொது மக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள் / குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல் | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **18** | பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல் | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் /பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் | இணக்கமற்றது | தயாரிக்கப்படவில்லை | எதிர்வரும் கால கட்டத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமற்றது | தயாரிக்கப்படவில்லை | எதிர்வரும் கால கட்டத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| **19** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் | இணக்கமற்றது | தயாரிக்கப்படவில்லை | எதிர்வரும் கால கட்டத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும் | இணக்கமானது | | |

| இல | ஏற்புடையதேவைப்பாடு | இணைக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின்அதுபற்றிசுருக்கமாகவிபரிக்குக | எதிர்காலத்தில்இணக்கமற்றதினைதவிர்ப்பதற்குமுன்மொழியும்சரியான நடவடிக்கையானது |
|---|---|---|---|---|
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது | இணக்கமற்றது | ஒப்பந்தங்கள் கைச்சாடிடப்படவில்லை | எதிர்வரும் கால கட்டத்தில் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களை கைச்சாடிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல் | இணக்கமற்றது | உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படவில்லை | எதிர்வரும் கால கட்டத்தில் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது | | |

# වාරිමාර්ග අංශය යටතේ ක්‍රියාත්මක වන ව්‍යාපෘති

நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்

Projects Implemented under the Irrigation Division

## 1. මහවැලි ජල සුරක්ෂිතතා ආයෝජන වැඩසටහන/ மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் (MIWSIP)/ Mahaweli Water Security Investment Program (MIWSIP)



වම් ඉවුර සහ දකුණු ඉවුර ඇළ මාර්ග සඳහා ජල පාලන සහ මිනුම් පහසුකම් ඇතුළුව මිනිපේ අමුණ උසට නැංවීම/ இடது கரை மற்றும் வலது கரை கால்வாய்களுக்கான நீர் கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகள் உட்பட மினிபே அணைக்கட்டை உயரமாக்குதல்./ Heightening of Minipe Anicut Including Water Control and Measurement Facilities for Left Bank and Right Bank Canals



ඉහළ ඇළහැර ඇළ, කළුගඟ - මොරගහකන්ද ඇළ ඉදිකිරීම/ மேல் எலஹெர கால்வாய், களுகங்கை - மொரகஹகந்த இடமாற்ற கால்வாய் நிர்மாணம்/ Construction of Upper Elahera Canal, KaluGanga - Moragahakanda Transfer Canal



ඉහළ ඇලහැර ඇළ ඉදිකිරීම - උමං කැණීමේ යන්ත්‍රය/ மேல் எலஹெரா கால்வாய் கட்டுமானம் - சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரம்/ Construction of Upper Elahera Canal – Tunnel Boring Machine

## 2. ඒකාබද්ධ ජලාධාර හා ජල කළමනාකරණ ව්‍යාපෘතිය/ ஒருங்கிணைந்த நீர் வளங்கள் மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம்/ Integrated Watershed & Water Resources Management Project



පෙර / முன்/ Before



පසු / பிறகு/ After

මන්නාරම - අකතිමුරිප්පු වැව් බැම්මේ වැඩිදියුණු කිරීම - (සම්පූර්ණයි)/ மன்னார் - அகத்திமுறிப்பு ஏரிக்கரை மேம்பாட்டுப் பணிகள் - (முடிக்கப்பட்டது)/ Improvements to Akathimurippu Tank Bund - Mannar (Completed)





පෙර / முன்/ Before                    පසු / பிறகு/ After

සේනානායක සමුද්‍රය රිප් රැප් ආරක්ෂණය සහ බැම්ම ප්‍රතිසංස්කරණය කිරීම - අම්පාර - (ක්‍රියාත්මක වෙමින් පවතී)/ சேனநாயக்க கடல் பாறைப் பாதுகாப்பு மற்றும் கரை புனரமைப்பு - அம்பாறை - (தொடர்ந்து நடைபெறுகிறது)/ Rehabilitation of Senanayaka Samudraya Rip Rap Protection and Bund - Ampara - (Ongoing)





පෙර / முன்/ Before                    පසු / பிறகு/ After

මහනුවර පොල්ගොල්ල බැරේජ් වේල්ල සඳහා ගැන්ට්‍රි දොඹකරයක් සවි කිරීම - (සම්පූර්ණ කර ඇත)/ கண்டியில் உள்ள பொல்கொல்ல தடுப்பணைக்கு கேன்ட்ரி கிரேன் நிறுவுதல் / Installation of Gantry Crane for Polgolla Barrage Dam - Kandy - (Completed)

**3. ඒකාබද්ධ ජල කළමනාකරණ ප්‍රවේශයක් තුළින් ශ්‍රී ලංකාවේ වියළි කලාපයේ කුඩා ඉඩම් හිමි ගොවීන්ගේ දේශගුණික විපර්යාසවලට මුහුණදීමේ ශක්තිය වර්ධනය කිරීමේ ව්‍යාපෘතිය (වැව්ගම් පුබුදුව - CRIWMP)/ நீர் முகாமைத்துவத்துக்கான ஒருங்கிணைந்த பிரவேசிப்பின் ஊடாக கால நிலை ஏற்றத் தாழ்வுகளை முகாமைத்துவப்படுத்துதல் (வெவ்கம் புபுதுவ)/ Strengthening the Resilience of Smallholder farmers in the Dry Zone to Climate Variability and Extreme Events through an Integrated approach to Water Management Project (Wewugam Pubuduwa - CRIWMP)**





වාණිජ වගාව, ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය/ வணிக ரீதியான சாகுபடி, திருகோணமலை மாவட்டம்/ Commercial cultivation ,Trincomalee district



කෘෂි තාක්ෂණික ගොවිපල - ත්‍රිකුණාමලය/ அக்ரோ டெக் பண்ணை - திருகோணமலை/ Agro tec farm – Trincomalee

4. **නකල්ස් කඳුවැටියේ අවදානමට ලක්ව ඇති ගංගා ද්‍රෝණි, දිය ඇළි ආශ්‍රිත ප්‍රදේශ සහ පහළ ජල පෝෂක ප්‍රදේශයේ වාසය කරන ගොවීන් සහ වැවිලි ප්‍රජාවගේ දේශගුණික විපර්යාසයන්ට ඔරොත්තු දීමේ ශක්තිය වැඩි දියුණු කිරීම (හරිත දේශගුණික අරමුදල) / இலங்கையின் நக்கிள்ஸ் மலைத்தொடர் நீர்ப்பிடிப்புப் பகுதியின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் படுகைகள், நீர்நிலைப் பகுதிகள் மற்றும் கீழ்நீர்ப் பகுதிகளில் வசிக்கும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாயப் தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்திறனை வலுப்படுத்துதல் - (GCF நக்கிள்ஸ் திட்டம்) / Strengthening Climate Resilience of Subsistence Farmers and Agricultural Plantation Communities residing in the vulnerable river basins, watershed areas and downstream of the Knuckles Mountain Range Catchment of Sri Lanka - (GCF Knuckles Project)**

වැව් සහා වාරි පද්ධති පුනරුත්ථානය/ குளங்கள் மற்றும் நீர்ப்பாசன வலையமைப்புகள் புனரமைப்பு/ **Tanks and irrigation networks rehabilitation**



ගෝනමඩ මුකලාන වැව් රොන් මඩ උගුල/ கோனாமடா முகலான தொட்டி சேறு பொறி/ Gonamada Muukalana Tank Silt Trap



මහවෙල අමුණ/ மகாவெல அணைக்கட்டு/ Mahawela Anicut

**ආක්‍රමණශීලී පිටසක්වල විශේෂ ඉවත් කිරීම - ඝනත්වය සහ ජෛව ස්කන්ධ මැනීම/ஆக்கிரமிப்பு அன்னிய இனங்கள் நீக்கம் - அடர்த்தி & உயிரி அளவீடு/ Invasive Alien Species removal – density & biomass measuring**







වනාන්තරවල සංයුතිය සහ ස්වාභාවික පුනර්ජනනය වැඩි දියුණු කිරීම/ காடுகளின் அமைப்பையும் இயற்கையான மீளுருவாக்கத்தையும் மேம்படுத்துங்கள் Improve the forest species composition and natural regeneration

**අතින් සාදන ලද කඩදාසි නිෂ්පාදන සදහා ආක්‍රමණශීලී ආගන්තුක ශාක භාවිත කිරීම./ ஆக்கிரமிப்பு தாவரங்களால் கையால் செய்யப்பட்ட காகித தயாரிப்புகள்/Handmade paper productions by invasive plants**



කඩදාසි නිෂ්පාදනය පිළිබඳ ප්‍රායෝගික පුහුණු වැඩසටහන - අමුද්‍රව්‍යයක් ලෙස ආක්‍රමණශීලී ශාක භාවිත කිරීම./ காகித உற்பத்தி குறித்த நடைமுறை பயிற்சித் திட்டம் - ஆக்கிரமிப்பு தாவரங்களை மூலப்பொருளாக உருவாக்குதல்/ Practical training programme on paper production- Making invasive plant as a raw material



නිෂ්පාදිත කඩදාසි භාවිතයෙන් අත්කම් නිෂ්පාදන පුහුණු වැඩසටහන/ செயற்கை காகிதத்தைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சித் திட்டம்/ Handicrafts production training programme using manufactured paper

**හරිත වටිනාකම් දාම අවස්ථා ආරම්භ කිරීම/ பசுமை மதிப்புச் சங்கிலி வாய்ப்புகளைத் தொடங்குதல்/ Initiating green value chain opportunities**





"හෙයාර් පාර්ක්" වතුයායේ (වමේ සහ මැද), සෙම්බුවත්ත වතුයාය (පහළ දකුණේ) සහ සේලගම වතුයායේ (ඉහළ දකුණේ) වතු ප්‍රජාවන් සමඟ හරිත වටිනාකම් දාම සංවර්ධන අවස්ථා පිළිබඳ මහජන උපදේශනය./ "ஹேர் பார்க்" தோட்டம் (இடது மற்றும் நடுவில்), செம்புவத்த தோட்டம் (கீழ் வலது) மற்றும் செலகம தோட்டம் (மேல் வலது) ஆகிய இடங்களில் உள்ள தோட்ட சமூகங்களுடன், பசுமை மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்த பொது கலந்தாய்வு./ Public consultation on green value chain development opportunities with plantation communities at "Hair Park" Estate (left and center), Sembuwatta Estate (bottom right) and Selagama Estate (top right).

# ක්‍රියාත්මක ආයතන යටතේ ක්‍රියාත්මක වන ව්‍යාපෘති / වැඩසටහන්
செயற்படும் நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சிகள்
Projects / Programmes Implemented under the Implementing Institutions

## වාරිමාර්ග දෙපාර්තමේන්තුව
## நீர்ப்பாசன திணைக்களம்
## Irrigation Department

**1 යාන් ඔය ජලාශ ව්‍යාපෘතිය /யான் ஓயா திட்டம் / Yan Oya Project**



පාලම සහ ජල පාලන නිර්මිතය ඉදිකිරීම/ பாலம் மற்றும் நீர் கட்டுப்பாட்டு கட்டமைப்பின் கட்டுமானம் / Construction of bridge cum regulator



යාන් ඔය අමුණ වැඩිදියුණු කිරීම/ யான் ஓயா அனிகட்டின் மேம்பாடு/ Improvement of Yan oya anicut

**2 ඇල්ලේ වැව ජලාශ ව්‍යාපෘතිය / எல்லே வேவா நீர்த்தேக்கத் திட்டம்/ Ellawewa Reservoir Project**



ප්‍රධාන වේල්ලෙහි පිරවීම් කටයුතු / பிரதான அணையில் நிரப்பும் பணி/ Main dam filling work



පිටවානෙහි ඉදිකිරීම් කටයුතු/ பிடவனாவில் கட்டுமானப் பணிகள் / Spill construction work

**3 උමා ඔය පහළ සංවර්ධන ව්‍යාපෘතිය / உமா ஓயா கீழ்நதி மேம்பாட்டுத் திட்டம்/ Uma Oya Downstream Development Project**





උමා ඔය පහළ සංවර්ධන ව්‍යාපෘතිය / உமா ஓயா கீழ் நதி மேம்பாட்டுத் திட்டம்/ Uma Oya Downstream Development Project

4 මල්වතු ඔය ජලාශ ව්‍යාපෘතිය/ **மல்வத்து ஓயா நீர்த்தேக்கத் திட்டம்/ Malwathu Oya Reservoir Project**



බෑවුම් සැකසීම සහ තණකොළ ඇල්ලීම/ சரிவு தயாரிப்பு மற்றும் புல் வெட்டுதல்/ Slope Stripping & Turfing



භූ විද්‍යාත්මක කටයුතු/ புவியியல் வேலை/ Geological Treatment

**5** ඒරු වැව **-** මහකනදරාව පෝෂිත ඇල ව්‍යාපෘතිය **/Eruwewa – Mahakanadarawa feeder canal Project**



எரு வேவா ஸ்பில்வேயை உயர்த்துதல் / Raising Eru wewa spillway



ඇල ඉවුරු ආරක්ෂණය/ ஆற்றங்கரை பாதுகாப்பு/ Canal bund protection

6 ගල්ඔය රාජාංගනය,හුරුළු වැව සහ මින්නේරිය ඇතුළු ප්‍රධාන වාරිමාර්ග පද්ධති ප්‍රතිසංස්කරණය කිරීම / **கல் ஓயா, ராஜாங்கனை, ஹுருலு வெவ மற்றும் மின்னேரிய உள்ளிட்ட பிரதான நீர்ப்பாசன அமைப்புகளை புனரமைத்தல்**/ Rehabilitation of Irrigation System Galoya, Huruluwewa, Rajanagnaya and Minneriya



ගල්ඔය වාරි යෝජනා ක්‍රමය / கல் ஓயா திட்டம்/ Gal oya scheme



ගිරිතලේ හා මිනනේරිය වාරි යෝජනා ක්‍රමය / கிரிதலே மற்றும் மினனேரிய நீர்ப்பாசனத் திட்டம்/ Girithale and Minneriya Scheme

## වාරිමාර්ග කළමනාකරණ අංශය
## நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு
## Irrigation Management Division

**1.** දිට්වා සුළි කුණාටුව හා ගංවතුර නිසා විනාශ වූ රාජාංගනය ව්‍යාපාරයේ දකුණු ඉවුර ප්‍රධාන ඇළේ පළමු කිලෝමීටරය ප්‍රතිසංස්කරණය/ தித்வா புயல் மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்த ராஜங்கனாயா திட்டத்தின் வலக்கரையில் உள்ள பிரதான கால்வாயின் முதல் கிலோமீட்டர் பகுதியை புனரமைத்தல்/ Reconstruction of the first kilometer of the main canal on the right bank of the Rajanganaya project, which was destroyed by Cyclone Ditwah and floods




**2.** කෘෂි අලෙවිසැල ස්ථාපිත කිරීම - රිදිබැදි ඇළ ව්‍යාපාරය/ வேளாண் சந்தை அமைத்தல் - ரிதிபேதி கால்வாய்த் திட்டம்/ Establishment of an agricultural market - Ridibedi Ela Project




## ශ්‍රී ලංකා මහවැලි අධිකාරිය
## இலங்கை மகாவலி அதிகார சபை
## Mahaweli Authority of Sri Lanka (MASL)








  

## මධ්‍යම ඉංජිනේරු සේවා (පුද්ගලික) සමාගම
## மத்திய பொறியியல் சேவைகள் (பி.வி.டி) லிமிடெட்
## Central Engineering Services (PVT) LTD



පිළිකා ප්‍රතිකාර ඒකකය - ශික්ෂණ රෝහල, මහනුවර / புற்றுநோய் சிகிச்சை பிரிவு - போதனா மருத்துவமனை, கண்டி / Cancer Treatment Unit - Teaching Hospital, Kandy



කොළඹ අධිකරණ සංකීර්ණය ප්‍රතිසංස්කරණය කිරීම/ கொழும்பு நீதிமன்ற வளாகப் புதுப்பித்தல்/ Renovation of Court Complex - Colombo



පිළිකා රෝහල - මහනුවර / கண்டி புற்றுநோய் மருத்துவமனை / Cancer Hospital - Kandy



නගර ශාලාව - යාපනය / நகர சபை – யாழ்ப்பாணம்/ Town Hall- Jaffna

# 5 Indicator 6.5.1 score

### How to calculate the indicator 6.5.1 score

Please complete the table below as follows:

1. Calculate the average score of each of the four sections by averaging all question scores in each section, rounded to the nearest whole number.
   *Example: Section average of 41.5 should be rounded to 42. Section average of 70.2 should be rounded to 70.* If 'not applicable' is selected for any question, this should not be included in the indicator calculations, and therefore will not affect the average score. However, questions with a score of '0' (zero) should be included.
2. Calculate the average of the four section scores (whole numbers) to give the overall score for indicator 6.5.1, **rounded to the nearest whole number.**
   *Example: Calculating final IWRM score from four section scores: (81+ 63 + 47 + 58)/4 = 62.25. Final 6.5.1 score (rounded to a whole number) = 62.*

   Please note an automated calculation template is available here if required.

| Section | Average Scores (all values rounded to nearest whole number) |
|---|---|
| Section 1 Enabling environment | 320/6 = 53 |
| Section 2 Institutions and participation | 630/10 = 63 |
| Section 3 Management instruments | 390/8 = 49 |
| Section 4 Financing | 160/5 = 32 |
| **Indicator 6.5.1 score = Degree of IWRM* implementation (0-100)*** | **49** |

* Use rounded section average scores (to the nearest whole number), to calculate the indicator score, and round this to the nearest whole number.

**Interpretation of the score**

The score indicates the 'degree of implementation of integrated water resources management', on a scale of 0 to 100, with 0 signifying 'very low' implementation, and 100 signifying 'very high' implementation. However, the true value of the survey to countries lies within the scores, 'status and progress' and 'way forward' fields for each question, as this helps to identify which actions need to be taken to move towards a greater degree of implementation of IWRM.

ARI/A/MOA/02/2026/04/07 2026 மே ஆந் திகதி

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

**தலைப்பு 118 – விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை**

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 118 – விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2025 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து

பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02∴2025 இன் பிரகாரம் விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02∴2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 வருமானம்**

(அ) ஏசீஏ – 1 (ஞ) படிவம் மற்றும் ஊஜபுயுளு கணனி முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டில் 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 68,273,002 ஆகவும், ஏசீஏ – 1 (ஞ) படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 648,779,153 ஆகவும், கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்குப் பிரிவின் கோவைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 61,894,276 உம், மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 655,157,879 உம் ஆகும். அதன் பிரகாரம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானத்தில் ரூபா 6,378,726 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஏசீஏ – 1 (ஞ) படிவத்தின் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிலுவை வருமானக் கூற்றில் அறிக்கையிடுகின்ற ஆண்டிற்குரிய நிலுவைப் பணம் மற்றும் ஆண்டின் இறுதி மீதி கணக்கீடு செய்யப்படவில்லை. அதன் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் நிலுவை வருமானத்தின் மொத்தப் பெறுமதி இனங்காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்குப் பிரிவின் கோவைகளின் பிரகாரம் மீளாவாண்டின் இறுதியில் 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு திட்டத்திற்குரிய அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலிருந்து மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 579,246,258 ஆக இருந்ததுடன் லங்கா சதொச நிறுவனம் வழங்கிய தகவலின்படி, மேலும் அந்த மாவட்டங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 24,780,679 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 544,465,579 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-1(ஹை) படிவத்தின் பிரகாரம் நீர்ப்பாசன பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற மொறகஹகந்த நீர் மின் உற்பத்தி செயற்திட்டத்தின் மூலம் 2025 ஆம் ஆண்டிற்காக நீர் மின் மூலம் விற்பனை செய்யப்பட்டு கிடைத்த உள்ளபடியான வருமானம் ரூபா 1,436,959,970 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வருமானக் கூற்றின் படி (ஏசீஏ-1) 2025 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற உள்ளபடியான வருமானம் ரூபா 1,871,366,009 ஆனமையால் அதனிடையே ரூபா 434,406,039 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த மின் உற்பத்தி செயற்திட்ட வருமானமாக ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,871,714,601 ஆக இருந்த போதிலும் சிகாஸ் கணனி உள்ளீட்டில் நாளதுவரையாக்கப்பட்ட வருமானம் ரூபா 1,872,063,193 ஆனமையால் அதற்கிடையே ரூபா 348,592 வேறுபாடு காணப்பட்டது.

(உ) மொறகஹகந்த நீர் மின் உற்பத்தி செயற்திட்டத்தின் வருமான பெறுவனவுகளில் விபரங்களின் படி நீர்மின் விற்பனைக்காக 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் இல்லாது இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் நிலுவை வருமானக் கூற்றில் (யுஊயு-1(ஈ)) 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 11,224,726 நிலுவையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 மூலதன செலவினம்

விவசாயப் பிரிவில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2103 செலவின விடயத்திற்காக 240 தலைப்பின் மூலம் ரூபா 73,489,136 நிதியேற்பாட்டின் கீழ் 05 விவசாய உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரண தொகுதி ஒன்று வெளிநாட்டு மானியமாக கிடைக்கப் பெற்று விவசாயத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய மானியம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 625(1) இன் பிரகாரம் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அப் பெறுமதியால் மூலதன செலவினம் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. மேலும் மாணியமாகக் கிடைக்கப் பெற்ற இந்த உபகரணங்கள் நிதிப்பிரமாணம் 625(ஆ) மற்றும் (உ) பிரிவுகளின் படி பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 நிதியல்லாச் சொத்துக்கள்

(அ) அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (யுஊயு-06.ஃ.ளுயு 82 படிவம்) நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 129,158,836,914 ஆக இருந்ததுடன் அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளினாலும் தயாரிக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்களில் கூட்டுமொத்தம் ரூபா 4,391,348,967 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 124,767,487,947 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் ஏனைய நிறுவனங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 22,500,000 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட தகவல்களின் படி மாற்றப்பட்டிருந்த

சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,500,000 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 18,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஒவ்வொரு பிரிவினாலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 42,964,030,801 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட தகவல்களின் படி ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,549,976,058 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 33,414,054,743 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் ஒவ்வொரு பிரிவினாலும் அகற்றப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்தக்களின் பெறுமதி ரூபா 137,120,134,690 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 29,744,688,323 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 107,375,446,368 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) சனாதிபதியால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் 2412∴08 மற்றும் 2024 நவம்பர் 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமாணி மூலம் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட கிராமிய பொருளாதார பிரிவு வியாபாரம், வணிகம், உணவு, பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 02∴2017 இன் பிரகாரம் கிராமிய பொருளாதார பிரிவிற்குரிய பெறுமதி ரூபா 109,748,677 ஆன நிதியல்லாச் சொத்துக்கள் புதிய அமைச்சிற்கு மாற்றப்படால் தொடர்ந்தும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது.

(ஊ) அமைச்சின் விவசாயப் பிரிவு மற்றும் கால்நடை வளப் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஊஐபுயுளு கணனி முறைமையை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) (ை) அமைச்சுக்கு உரித்தற்ற மற்றும் பயன்பாட்டில் காணப்படாத பெறுமதி ரூபா 88,692,820 ஆன 07 வாகனங்கள் ஊஐபுயுளு கணனி முறைமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ைை) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2∴2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், பதிவு உரித்து உள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து

கொள்வதற்கோ அல்லது பதிவு உரித்து உள்ள நிறுவனத்திற்கு முறையான பிரகாரம் கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ஏனைய நிறுவனங்களுக்கு சட்ட ரீதியான உரித்து காணப்படுகின்ற விவசாய அமைச்சின் பயன்பாட்டில் உள்ள பெறுமதி ரூபா 7,600,000 ஆன 03 வாகனங்கள் ஊஜபுயுளு கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஹை) அமைச்சு பயன்படுத்துகின்ற பதிவு உரித்து அமைச்சுக்கு சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 303,980,000 ஆன 24 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 01 வாகனம் ஊஜபுயுளு கணனி முறைமையிலும், நிதிக்கூற்றுக்களிலும் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஊை) விவசாய அமைச்சின் கீழ் பதிவு காணப்படுகின்ற அமைச்சு மற்றும் திணைக்களங்களால் பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி ரூபா 138,700,000 ஆன 13 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 10 வாகனங்கள் ஒதுக்கப்பட்ட அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்படாமல் தொடர்ந்தும் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 13,770.22 மில்லியன் கிரயமொன்று செலவிடப்பட்ட எனினும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத நீர்ப்பாசன பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 06 உள்நாட்டு நிதிய செயற்திட்டங்கள் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் (ளுயு 82) கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த ஒவ்வொரு செயற்திட்டத்திற்கான நடைமுறை வேலை அறிக்கை அல்லது விரிவான செலவின விபரங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நீர்ப்பாசன பிரிவின் மூலம் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் 118 வாகனங்களின் பெறுமதி ரூபா 1,120,129,125 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் இயந்திரப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்த அமைச்சுக்குச் சொந்தமான கெப் வண்டி, கார், மோட்டார் வண்டியை உள்ளடக்கிய 178 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பிரிவிற்குரிய 48 இயந்திர உபகரணங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி அப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னாள் காணப்பட்ட நீர்பாசன அமைச்சினால் 05 செயற்திட்ட நிர்மாணங்கள் பேணிச் செல்லப்பட்டதுடன் அந்த செயற்திட்டத்திற்காக திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா 6,679,003,446 ஆகும். எனினும் அந்த திகதியின் பின்னர் இந்த

செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக எந்த ஒரு தொகையும் செலவிடப்படாமல் கைவிடப்பட்ட போதும் அதற்காக செலவிடப்பட்ட செலவினத்திற்கான விரிவான செலவின விபரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் முறையான அங்கீகாரம் இன்றி செயற்திட்ட கணக்காளரின் 2025 திசெம்பர் 11 ஆந் திகதிய இலக்கம் ஆஜ.ே.கு.ே.15.ீசழதநஉவ.ே.புநெ.ே.2025 என்ற கடிதத்தின் மூலம் அந்த செயற்திட்ட செலவினம் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை மகாவலி அதிகார சபையினால் அந்த செலவினங்கள் அல்லது சொத்துக்களை கையேற்று நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வந்திருந்தமைக்கு அமைச்சுக்கு அறிவிக்காது இருந்ததுடன் மேலே குறிப்பிடப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்த செலவினங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையின் புத்தகங்களில் எடுக்கப்படாத இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**1.6.4 நிதிச் சொத்துக்கள்**

(அ) அமைச்சின் விவசாயப் பிரிவில் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 511,340 ஆக இருந்ததுடன் அந்த மீதி 1 – 3 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரியதாகும்.

(ஆ) கிராமியப் பொருளாதாரப் பிரிவின் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிட வேண்டிய 5 – 10 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்குரிய கடன் மீதி ரூபா 175,714 கடன் மீதியாக இருந்ததுடன் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 5 – 10 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்குரிய கடன் மீதி ரூபா 249,535 ஆகும்.

(இ) கால்நடை வளப் பிரிவில் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 338,927 ஆக இருந்ததுடன் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 286,408 ஆன இரண்டு பேர்களிடம் இருந்தான மீதி 1 – 3 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரிய மிதியாக இருந்ததுடன் ரூபா 62,519 மீதி 10 – 20 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரியதாகும்.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஓஓஜஏ அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் காணிப் பிரிவில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 01 – 03 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரிய ரூபா 226,024 அறவிடப்படாத பழைய மீதி ஒன்று காணப்பட்டது.

(உ) 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 262.ே2017 இன் பிரகாரம் அறவிட வேண்டிய 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் மரணமடைந்த காணிப் பிரிவின் உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற 1 – 3 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்குரிய ரூபா 236,802 கடன் மீதி காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஓஓஜஏ அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நீர்ப்பாசனப் பிரிவில் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 222,545 தொகை ஓய்வு பெற்றுச் சென்றிருந்த நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 359,364 தொகை, சேவையை விட்டுச் சென்ற நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 801,408 ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 80,511 மற்றும் இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 431,666 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,895,494 கடன் மீதி அறவிடப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. இந்த மீதியில் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 1,015,749 மீதியும், 1 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 359,122 உம், 10 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையில் ரூபா 520,623 உம் காணப்பட்டது.

### 1.6.5 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

அமைச்சின் விவசாயப் பிரிவின் மூலம் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நட்டம் மற்றும் இழப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 104 | நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செலவினப் பேரேடுகள் | நிதிப்பிரமாணம் 447 | நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வெளிநாட்டு மானிய உபகரணங்களுக்கான பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 625 (ஆ) மற்றும் (உ) | பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான** **அமுல்படுத்தப்படாதிருந்த** **இந்த அறிக்கையின்**

| தொடர்பு | | பரிந்துரைகள் | பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **<u>விவசாய பிரிவு</u>** | | | |
| (அ) | 4.9 | கணக்காய்வு ஐயவினாவிற்காக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 4.6 |
| (ஆ) | 1.6.2.2 (உ) | பழுதுபார்த்தல் மேற்கொண்டு வாகனத்தை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். | 4.7 (ஆ) |
| (இ) | 4.10 | வைப்புத் தொகை அறவிடப்படல் வேண்டும். | 4.7 (அ) |
| **<u>நீர்ப்பாசன பிரிவு</u>** | | | |
| (ஈ) | 1.6.1 (ஆ) (ஐ) | 2024 மற்றும் 2025 என்ற ஆண்டுகளுக்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டுள்ள அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட செலவினங்கள் நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் (ளுயு 82) கணக்கீடு செய்தல் வேண்டும். | 1.6.3 (எ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

முன்னர் காணப்பட்ட அரசாங்கத்தின் உரக் கம்பனியான வ.்.ப லங்கா உரக் கம்பனி மற்றும் வ.்.ப கொழும்பு கொமர்'ல் உரக் கம்பனியால் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கான நாணயக் கடிதம் காலாவதியாகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய வழங்குனருக்கு செலுத்துவதற்கு தேவையான பணம் அந்த சந்தர்ப்பத்தின் போது திறைசேரியில் இருந்து கிடைக்காமையின் அடிப்படையில் அரசாங்க வங்கியில் இருந்து பெறப்பட்ட காலக் கடன்களான ரூபா 47,465,632,771 இற்கு உரிய 2025 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 8,784,284,850 மூலதன பெறுமதி ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,443,211,932 வட்டி செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் செலுத்துவதற்கு உள்ள கடன் மீதியின் பெறுமதி ரூபா 8,993,745,673 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 வருமான முகாமைத்துவம்

(அ) நிதிப்பிரமாணம் 128(2)(ஈ), நிதிப்பிரமாணம் 176(1), இலக்கம் 01∴.2015 மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் இலக்கம் 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் விவசாயப் பிரிவின் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை அந்த கால எல்லை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் அரச நிதிப் பணிப்பாளருக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2025 இன் நிதி ஆண்டிற்குரிய அந்த அறிக்கை எதுவும் உரிய கால எல்லை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏசீஏ-1 (ஹை) படிவத்தின் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையிலான முரண்கள் 38 சதவீதம் வரை முரண்கள் ஏற்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு முடியாது இருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு ஏற்படுவதற்குரிய குறித்துரைத்த காரணம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 648,779,153 ஆக இருந்ததுடன் அது ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் 90 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகும். அதன் பிரகாரம் மாவட்ட செயலகங்களின் மூலம் வருமானம் சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பாக அமைச்சின் மேற்பார்வை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) நீர்ப்பாசன பிரிவிற்குரிய கொத்தமலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் குறுங்கால பயிற்சி திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற விடுதி வசதிகளுக்காக நிறுவனத்தால் அறவிடப்படுகின்ற கட்டணம் மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை தீர்மானிப்பதற்கு உரிய குறிகாட்டிகளை தீர்மானித்து அதற்காக அமைச்சின் அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ளப்படாது இருந்ததுடன் அந்த பயிற்சி நிறுவனம் 2024 ஆம் ஆண்டின் போது குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 18 இனை நடாத்தி அதன் மூலம் நிறுவனத்திற்கு ரூபா 4,435,871 வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் அதில் செலவினங்களைக் கழித்த பின்னர் ரூபா 2,222,241 மிகைப் பணம் காணப்பட்ட போதும் ரூபா 1,573,127 தொகை மாத்திரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 649,114 தொகை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செலவின முகாமைத்துவம்

(அ) விவசாயப் பிரிவின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் கீழ் வருகின்ற மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்காக 2025 இன் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செலவினத் தலைப்பு

இலக்கம் 240 இன் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் செலவின விடயம் 03 இற்குரியதாக 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் அமைச்சின் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிப்பதிலில் உள்ள பற்றாக்குறை போன்று திட்டமிடப்பட்ட மூலதன செயற்திட்டங்கள் உரிய பிரகாரம் அமுல்படுத்தாமை மற்றும் தேவையினை விஞ்சி நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மூலதன செலவின விடயத்தின் கீழ் விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆன செயற்திட்ட இலக்கம் 80, 93 மற்றும் 94 இற்குரிய மூலதன செலவின விடய இலக்கம் 2506 மற்றும் 2509 இற்கு பெறப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 22 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சிலும், விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மூலதன செலவின விடய இலக்கம் 2003 இற்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 15 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னரும் விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செயற்திட்ட இலக்கம் 47, 66, 80 மற்றும் 95 இற்குரிய மூலதன செலவின விடயங்களின் கீழான பாதீட்டு நிதியேற்பாடு 25 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையும், விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டெழும் செலவின விடயங்கள் 10 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாட்டின் அந்த செலவின விடயத்தில் 16 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையும், விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செயற்திட்ட இலக்கம் 73 மற்றும் 91 இற்குரிய மீண்டெழும் செலவின விடயங்கள் 02 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாடு முறையே 14 சதவீதம் மற்றும் 31 சதவீத நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீண்டெழும் செலவின விடய இலக்கம் 1101, 1102 மற்றும் 1201 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாட்டில் 23 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதன செலவின விடய இலக்கம் 2001, 2002, 2103 மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மூலதன செலவின விடய இலக்கம் 2002 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 310,500,000 பாதீட்டு நிதியேற்பாடும், அபிவிருத்தி நிகழச்சித் திட்டத்தின் கீழான செயற்திட்ட இலக்கம் 64 இற்குரிய மீண்டெழும் செலவின விடய இலக்கம் 1509 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 39,000,000 இல் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 16,668,000 நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னர் சேமிப்பு நிதியேற்பாடும், விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டெழும் செலவின விடய இலக்கம் 1405 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 500,000 நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னர் சேமிக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிப்பிரமாணம் 622 இன் பிரகாரம் வரைவு மதிப்பீடு தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்படாத வெளிநாட்டு மாணியம் நன்கொடைகளுக்காக வீரமன் நடைமுறை அல்லது குறைநிரப்பு நிதியேற்பாடு பெற வேண்டி இருந்த போதிலும் விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான 2103 செலவின விடயங்களுக்கு உரிய 240 தலைப்பின் மூலம் ரூபா 73,489,136 நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பெறப்பட்ட வெளிநாட்டு மாணியம் அவசர மானியம் அல்லாமல் 2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்த வெளிநாட்டு மானியம் ஒன்றாக இருந்தமை கோவைகளைப் பரீட்சித்த போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ 2(ஐ) படிவத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட அபிவிருத்தி செலவினத்தின் கீழ் வருகின்ற செலவின விடய இலக்கம் 2103 இல் நிதியேற்பாட்டின் சேமிப்பு 79 சதவீதம் ஆக இருந்ததுடன் சேமிப்பிற்கான காரணமாக மடிகணனி மற்றும் ஸ்கானர் இயந்திரம் கொள்னவவு செய்தல் நிராகரிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும் இந்த நிதியேற்பாட்டின் சேமிப்பில் 94 சதவீதமும் வெளிநாட்டு மானியமாக பெறப்பட்ட விவாசய உபகரணங்களுக்காக தலைப்பு 240 இன் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமானம் 50 இன் பிரகாரம் மற்றும் தேவைகளை இனங்காணாமல் நிதி ஒதுக்குதல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையினால் 2025 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் மூலதன செலவின விடயம் 04 இற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் மீண்டெழும் செலவின விடயம் 02 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15,500,000 தொகையில் ரூபா 200,000 முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் செலவின விடயம் 26 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமாக ரூபா 51,247,720,000 தேறிய நிதியேற்பாட்டில் கூட்டுமொத்தமாக ரூபா 23,180,545,846 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 30 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஐ) 2025 ஆம் ஆண்டின் போது அமைச்சின் காணிப் பிரிவின் நிகழ்ச்சித் திட்டம் 01 இல் செலவின விடயம் 03 இற்காக ரூபா 11,900,360 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 7,529,617 அதாவது 60 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 07 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 31,130,339 நிதியேற்பாட்டில் ரூபா 11,000,869 தொகை அதாவது 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஒ) அமைச்சின் நிகழ்ச்சித் திட்டம் 02 இல் செலவின விடய இலக்கம் 2105 மற்றும் 2509 இன் கீழ் காணிப் பிரிவின் நிதியேற்பாடை ஒதுக்கும் போது உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியுமா என முறையான ஆய்வு செய்யாமல் ஒதுக்கப்பட்ட ஆரம்ப நிதியேற்பாடான ரூபா 5,000,000,000 தொகையில் ரூபா 1,282,297,793 நிதியேற்பாடு மீண்டும் ஏனைய செலவின விடயங்களுக்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் ரூபா 1,258,279,779 அதாவது 34 சதவீத அளவு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஓ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கும் பொறுப்பு தமது திணைக்களத்திற்கு உரிய வரைவு மதிப்பீடு பிரமாணங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுகின்றமை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாக சரியாத் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும். எனினும் காணி பிரிவில் செலவின விடயம் 09 இற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாடான ரூபா 4,054,000,000 பின்னர் 30 சதவீத அளவினால் அதாவது கூட்டுமொத்தமாக ரூபா 1,220,265,000 இனால் குறைவடைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

(அ) அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,272,613 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் விவசாய மற்றும் கால்நடை வளப் பிரிவினால் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் விவசாய மற்றும் கால்நடைவளப் பிரிவிற்குரிய ரூபா 17,127,988 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் இணைப்பு இலக்கம் ைைை இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.11 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் விவசாயப் பிரிவிற்கு வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| திறைசேரி செயலாளரின் 2024 திசெம்பர் 18 ஆம் திகதிய இலக்கம் 05.⁚.2024 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | விற்றுத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட அமைச்சின் விவசாயப் பிரிவிற்கு உரிய 41 வாகனங்கள் மற்றும் கொம்ரோலர் ஜனராலின் 2024 மே 20 ஆம் திகதிய இலக்கம் ஊபுமு.⁚.கேயுஆளு.⁚.01.⁚.03 என்ற கடிதத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 05 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. |

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் விவசாயப் பிரிவில் ீகு-8350 என்ற வாகனத்தின் சாரதி 2025 யூலை மாத இறுதியில் இருந்து செப்தெம்பர் மாத இறுதி வரை தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் விடுமுறை பெற்றுக் கொண்டு சேவைக்கு அறிக்கையிடாது இருந்த போதிலும் அந்த மாதத்திற்கான மாதாந்த சம்பளமாக ரூபா 110,955 தொகை அவரின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேவையில் ஈடுபடாத காலத்திற்கு மூல ஆவணங்கள் இல்லாமல் கொடுப்பனவு செய்தமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 இன் பிரகாரம் அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பாக கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

**3.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற பத்தரமுல்ல இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற செயலாளர், விவசாய அமைச்சு மற்றும் தலைவர், விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்ற பெயரிலான இரண்டு உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இணைப்பு (எனை) இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 வைப்புக்கள்**

2025 மே 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய காணிப் பிரிவிற்குரிய ரூபா 426,593 காலாவதியான வைப்பு மீதிகள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படாமல் அந்த கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக காணி மாநாட்டிற்காக காணி அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் அமைச்சின் பணிப்பாளர் (காணிக் கொள்கை) என்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்காக தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் வழங்கப்படுவதாக உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவு முகாமையாளர்களின் 2024 மார்ச் 13 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் போது அவர்களுக்கு இணைந்த படியாக ரூபா 714,980 செலுத்தப்பட்டதுடன் 2026 மார்ச் 27 ஆம் திகதியில் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டு பேரிடம் இருந்து மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 640,419 ஆகும்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை**

(அ) காணிப் பிரிவினால் நில அளவையாளர் திணைக்களத்திற்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,656,654,840 தொகை செலுத்தி அளவிடப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 2,134,429 ஆக இருந்ததுடன் அதில் வழங்கப்பட்டிருந்த உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 482,139 மாத்திரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது ரூபா 276,510,197 நிதி ஏற்பாடு பதிவாளர் நாயகம் திணைக்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு முதல் பதிவாளர் நாயகம் திணைக்கத்திற்கு உரித்துறுதி சான்றிதழ் பத்திரம் தயாரிப்பதற்காக பட்டோலை அனுப்பப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 864,960 ஆகவும் அந்த எண்ணிக்கையில் பதிவு செய்துள்ள உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 474,518 அல்லது 54 சதவீதம் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (ழுரவஉழஅந) பெற்றுக்கொள்ளாமை

(அ) அறுவடைக்குப் பின்னர் பயிர் இழப்புகளைக் குறைக்கவும், களஞ்சிய வசதிகளை மேம்படுத்தவும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் ரூபா 47,289,222 செலவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கச்சிகல்ஆர கிராம அலுவலர் பிரிவில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சிய வளாகத்தில் ஏற்றுமதிக்கான புளி வாழை பதப்படுத்தும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர் கட்டிடம் மற்றும் பொருத்திகளை ஒப்படைப்பது குறித்து எந்தவொரு குறிப்பிட்ட முடிவும் எடுக்கப்படவில்லை. பின்னர் ஒரு விவசாய கம்பனியொன்று ஸ்தாபித்து அந்த நிலையத்தின் பொறுப்பை அந்தக் கம்பனிக்கு கையளிக்க முன்மொழியப்பட்டு விவசாய கம்பனியைப் பதிவு செய்வதற்குரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநருடன் ரூபா 500,000 கேள்வி பெறுமதியின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் விவசாய கம்பனியை ஸ்தாபிக்கும் செயற்பாடுகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்காக எந்தவொரு ஏற்றுமதியாளரும் இனங்காணப்படாதிருந்ததுடன் செயற்பாடற்று காணப்படுகின்ற இந்த செயற்திட்டத்திற்காகச் செய்யப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உரத் தேவை மற்றும் உரங்களுக்கான கேள்வி குறித்த முதன்மைத் தரவுகள் இல்லாமையின் காரணமாக ஏற்படும் சிரமங்களைக் களைவதற்காக சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரித்து உரங்களின் பயன்பாட்டை நெறிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்தில் தேசிய உரச் செயலகத்திற்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் முறைமை உடன்படிக்கையின் இணைப்பு ஊ இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி 04 தொகுதிகளின் (உரத் தேவை மதிப்பீடு, விநியோகத் திட்டமிடல், உற்பத்தி∴கலவை∴இறக்குமதி ஒழுங்குபடுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு மற்றும் ஏனைய செயற்பாடுகள்) கீழ்

அபிவிருத்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதும் உர உற்பத்தி.்.கலவை.்.இறக்குமதி ஒழுங்குபடுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகிய செயல்பாடுகள் மாத்திரம் இந்த முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை 2024 திசெம்பர் 13 மற்றும் 2026 பெப்ரவரி 02 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த முறைமையின் மூலம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்ட ஏனைய செயற்பாடுகள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் சமீபத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் முறைமைகள் (யுபசயசயைெ.டமஇ புநழபுழளைைய மற்றும் குயசஅநசநேவ.டம) ஊடாகவும் செய்யப்படுவதால் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளின் இந்த இரட்டிப்பின் காரணமாக சிக்கனமற்ற செலவின நிகழ்ச்சித் திட்டங்கள் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதையும், அவற்றில் பெரும்பாலானவை வெளிநாட்டு நிதிகள் மூலம் நிதியீட்டம் செய்ய வேண்டியிருப்பதையும் தடுக்கும் தேசிய நோக்கத்தை மறுதலித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

வருடாந்த நிதிஏற்பாடு கிடைக்காமை அல்லது ஏனைய காரணங்களால் இடைநடுவில் நிறுத்தப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்படாத நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் உள்ள செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள், அதாவது, நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த மாதுரு ஓயா தென்கரை அபிவிருத்தி செயற்திட்டம், ரிதீமாலியத்த செயற்திட்டம், வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி செயற்திட்டம், கிவுல் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் மற்றும் கிங்னில்வலா செயற்திட்டம் போன்ற பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் விபரங்கள் எதுவும் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கைகளில் காண்பிக்கப்படவில்லை.

## 4.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

### 4.2.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

இலங்கையில் திரவப் பால் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்தில், கால்நடை வளப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட யூரோ 13.9 மில்லியன் பிரான்ஸ் குடியரசிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் 06 சிறு அளவிலான பால் உற்பத்தி நிலையங்களையும், 30 பால் சேகரிப்பு நிலையங்களையும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் 06 பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கு தலா ரூபா 500,000,000 பெறுமதியுள்ள இயந்திரங்களை வழங்கி அந்த இயந்திரத்தை ஸ்தாபித்து 02 அல்லது 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதிலும் ஹோமோஜிநய்சர் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான நிதிசார் இயலுமை காணப்படாமையின் காரணமாக, அத்தனகல்ல, பண்டாரகம, பொலன்னறுவை, வென்னப்புவ மற்றும் நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள 05 பால் பதப்படுத்தும் நிலையங்களில் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும், அந்த இயந்திரம் இல்லாமையின் காரணத்தால், சந்தைக்கு வெளியிடப்பட்ட திரவப் பால் உற்பத்திப் பொருட்கள் கெட்டுப்போனதன் காரணமாக அப்புறப்படுத்துவதற்காக 250 மில்லி லீட்டர் ஆன 1940 பால் போத்தல்கள் நாவலப்பிட்டி பால் பதப்படுத்தும் நிலையத்தில் களஞ்சியப்பட்டிருந்தமை 2026.03.06 ஆந் திகதி நடத்தப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தினசரி சேகரிக்கப்படும் திரவப் பாலின் தரத்தைச்

பரிசோதிப்பதற்காக பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,429,698 பெறுமதியுடைய (யூரோ 4,084.85) நவீன ஆய்வுகூட உபகரணங்கள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி பால் மாதிரிகளின் தரப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2.2 செயற்திட்டச் சொத்துக்களின் குறைவான பயன்பாடு ∴செயற்பாடற்று காணப்படுதல்

118-2-3-056-2506∴12 என்ற செலவின விடயத்தின் கீழ் மேலே 4.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சிறு அளவிலான பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட முன்மொழிவின் கீழ் 06 பால் பதப்படுத்தும் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு காணப்படுகின்ற 05 பால் சேகரிப்பு நிலையங்கள் வீதம் 30 இனை ஊக்குவிக்கும் நோக்கில் 06 பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கு ரூபா 13,366,593 (யூரோ 38,190.28) பெறுமதியுள்ள 05 பால் குளிரூட்டும் தாங்கிகளும் மற்றும் அது தொடர்பான துணை உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தபோதும் அந்த உபகரணத் தொகுப்புகள் உரிய பால் சேகரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படாதிருந்ததுடன் அந்தப் பால் சேகரிப்பு நிலையங்களிலிருந்து பால் பதப்படுத்தும் நிலையங்களுக்குப் பாலைக் கொண்டு செல்லும் நோக்கில் முறையே ரூபா 9,131,594 (யூரோ 26,090.27) மற்றும் ரூபா 6,048,262 (17,280.75 யூரோ) பெறுமதியுள்ள ட்ரெக் வண்டி பால் சேகரிப்பு பிரிவிலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும் பால் வழங்குனர்களால் தினமும் பால் பதப்படுத்தும் நிலையத்திற்கு வருகைதந்து பால் வழங்கியமையால் உரிய இயந்திரங்கள் விளைவற்று காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 4.3 பெறுகைகள்

(அ) நீர்ப்பாசன அமைச்சால் யுஅநசழிய யுளபை ீவந டுவன கம்பனியுடனான ஒப்பந்தத்தின் கீழ் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 41,876 மெட்ரிக் தொன் உரம் 2022 திசெம்பர் 02 ஆந் திகதி துறைமுக வளாகத்தில் பெறப்பட்டு நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் 2022 திசெம்பர் 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் விவசாய அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டதுடன் இந்த உர இருப்பு தொடர்பான கப்பல்சரக்கு பத்திரம், வர்த்தக விலைப்பட்டியல், சுங்கப் பத்திரம் (ஊரளனுநஉ) மற்றும் உரம் தரை இறக்குதல் தொடர்பான னுயடைல ஊயசபழ னுளைஉாயசபந ளுவயவநஅநவெ (கு7) சான்றிதழ் போன்ற அனைத்து ஆவணங்களும், அந்த உர இருப்பு வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தினாலும், உரிய உர கம்பனிக்கு பெறப்பட்ட உரத்தின் அளவு 41,714.5 மெட்ரிக் தொன்கள் ஆக இருந்தது எனவும், 161.5 மெட்ரிக் டன்கள் உரம் பற்றாக்குறையாக உள்ளது எனவும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்'ல் உர கம்பனியின் தலைவரால் 2023.01.20 ஆந் திகதிய ஊஊகுடு∴ளு∴ஆழூ∴ஆஜ∴02/2023 ஆம் இலக்க கடிதம் மூலம் விவசாய அமைச்சின் செயலாளருக்கும், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் செயல்பாட்டு முகாமையாளருக்கும் பிரதியுடன் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 55,769,987 நட்டத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கொத்மலையில் உள்ள நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்

தொடர்பான கேள்வி ஆவணங்களின் படி, கடந்த 5 ஆண்டுகளில் இதே போன்ற மற்றும் சமமான பெறுமதிக்கும், சிக்கலான தன்மையுடைய ஆகக் குறைந்தது 02 செயற்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளமைக்காக செல்லுபடியான சான்றுகள் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன்படி, நிறுவனத்தின் 06 நிர்மாண ஒப்பந்தங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் மேற்குறிப்பிட்ட தகவல்களுக்குச் செல்லுபடியாகும் சான்றுகளை வழங்கத் தவறியமையால் 2024 செப்டம்பர் 20 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின்படி பதிலளிக்காத கேள்விதாரர்களாகக் கருதி மீண்டும் கூறுவிலை கோருவதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அதற்கு முரணாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 21,199,239 ஆன 06 ஒப்பந்தங்களையும் ஒரே ஒப்பந்ததாரருக்கு ஒரு மாதத்திற்குள் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்காக கையளிப்பதற்கு 2024 ஒக்டோபர் 01 ஆந் திகதி பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதன் போது 2024 ஆம் ஆண்டுக்குரிய நிதிஏற்பாடுகள் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைவதாலும், இந்தக் பெறுகைகளுக்குரிய பட்டியல்களைத் தீர்த்தல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருப்பதாலும், இந்த ஒப்பந்ததாரரின் ஊஐனுயு நிறுவனத்தின் பதிவை ஓர் அனுபவமாக ஏற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்பட்டிருந்தது.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) விவசாயப் பிரிவிற்குச் சொந்தமான துமு-0194 மற்றும் துமு-0188 என்ற இரண்டு பேருந்து வண்டிகள் பல வருட காலம் முதல் அமைச்சுக் கட்டுபாட்டிற்கு புறம்பாக எந்த ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரும் முன்வராமல் அலுவலகத்தில் போக்குவரத்தில் ஈடுபடுகின்றது. அதில் பிரயாணம் செய்கின்ற உத்தியோகத்தர்கள் பல வருட காலம் முதல் போக்குவரத்து கட்டணம் சேகரித்து அந்த தொகையில் உரிய பேருந்து வண்டிகளின் எரிபொருள் செலவினம் தீர்த்து வைக்கப்பட்ட பின்னர் 2025 யூன் 30 ஆம் திகதி முறையே ரூபா 205,840 மற்றும் 257,111 தொகை அந்த உத்தியோகத்தரின் கையில் காணப்பட்டது. எனினும் இந்த பேருந்து வண்டிகளுக்குரிய சகல பழுது பார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்கீட்டு உத்தியோகத்தர், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டுக்கு புறம்பாக அரசாங்கத்தின் சொத்து ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் உழைக்கப்படுகின்ற பணம் முறையற்ற வகையில் இருக்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் பெறுகைகள் பிரிவினால் 2025 ஆகஸ்ட் 20 ஆம் திகதி விவசாய பிரிவிற்குரிய ீகு 8350 என்ற கெப் வண்டிக்குரிய 05 டயர்கள் மற்றும் 05 டியூப்லெஸ் வேல்வுகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதில் ரூபா 127,776 பெறுமதியுடைய 04 டயர்கள் அமைச்சின் கீழ் மாடியில் உடைந்த பொருட்கள் மற்றும் டயர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வலை அறையில் வைக்கப்பட்டிருந்த போது தொலைந்து பேயிருந்தது. இது தொடர்பாக உயர் முகாமைத்துவத்திற்கு பல சந்தர்ப்பங்களின்

போது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர்ப்பாசனப் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு இடையே 14 வாகனங்கள் பழுதுபார்க்க வேண்டிய வாகனங்களாக 2026 மார்ச் 04 ஆம் திகதி இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் அவற்றின் பழுதபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீர்ப்பாசன அமைச்சின் பேரில் பதிவு செய்யப்பட்டிருந்த 169 வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், சபைகள் மற்றும் தனியார் ஒப்பந்தகாரர்களினால் பயன்படுத்தப்படுவதுடன் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள செயற்திட்டங்களினால் ஏனைய நிறுவனங்களுக்குரிய 67 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்கத்திற்குரிய வாகனங்களின் பதிவு உரித்து தொடர்பான பிரச்சனைகளை தீர்த்து வைத்தல் தொடர்பாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் ஆகு.:.ஊபு.:.02 (உசை) என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீர்ப்பாசனப் பிரிவிற்குரிய என்ஜின் இயலளவு 1800 இற்கு மேற்பட்ட 04 பெற்றோல் வாகனங்கள் மற்றும் என்ஜின் இயலளவு 2300 இற்கு மேற்பட்ட 11 டீசல் வாகனங்களை உள்ளடக்கிய 21 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் அமைச்சின் வளவில் திறந்தவெளியில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் முதல் தரித்து வைக்கப்பட்டிருந்த வகையில் 2026 மார்ச் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்த வாகனங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான மாற்று வழிகளில் ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 76,876,755,039 செலவினம் ஒன்றைச் செய்து 2024 ஏப்ரல் 03 ஆம் திகதி நிர்மாணங்கள் பூர்த்தி செய்து செயற்திட்டம் கையளிக்கும் போது கையளித்தல் சான்றிதழ் பெறப்பட்டிருந்த போதிலும் இதன் வழுக்களின் பொறுப்பு உத்தரவாதக் காலமான 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தமையால் அந்த காலத்தில் முறையே 2025 செப்தெம்பர் 30 மற்றும் 2026 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2025 திசெம்பர் 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் கணக்குகளை தீர்த்து பூர்த்தி செய்யும் சான்றிதழ் விநியோகிப்பதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகும் 2026 மார்ச் 31 ஆந் திகதி வரை மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த காலப் பகுதியிலும் இதுவரையில் விஞ்சியிருந்ததுடன் செயற்திட்டத்தின் இறுதிக் கணக்குகள் தயாரித்து கணக்குகளை தீர்த்து செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு தவறியிருந்தது. 2024 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் மின்வலு உற்பத்தி செய்யும் மின்நிலையம், நீர்த்தேக்கத்தை உள்ளடக்கிய ஏனைய செயற்திட்டத்தின் சொத்துக்கள் மின்சார சபை மற்றும் மகாவலி அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்ட போதும் அவற்றின் செலவினங்களை இனங்கண்டு முறையான

பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சேதனப் பசளை செயற்திட்டத்தில் இடம்பெற்ற மோசடிகளை விசாரணை செய்வதற்காக விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்ட போதும் அந்த குழுவின் அறிக்கை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த சேதனப் பசளை செயற்திட்டத்தின் கீழ் ரூபா 31,027,575 சொத்துக்கள் அமைச்சின் நிலையான சொத்து கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு இன்றியும், சொத்துக்கள் கையளித்தல் உரிய திட்ட முறைமைக்குப் புறம்பாகவும் 2024 ஆம் ஆண்டின் போது புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2025 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சின் செயலாற்றல் அறிக்கையின் படி 2023 ஆம் ஆண்டு முதல் காணிப் பிரிவிற்குரிய சட்டங்கள், 12 விதிகளை திருத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் 06 சட்டங்களுக்குரிய பணிகள் பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் காணி அமைச்சின் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் 1979 இன் 43 ஆம் இலக்க அரச காணிகள் கையளித்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு இந்த சட்டத்தினை திருத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2026.03.31 ஆந் திகதி வரையிலும் சட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

(அ) விவசாயப் பிரிவிற்குரியதாக நட்ட இழப்பு ஏற்பட்டு 02 இற்கும் 11 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்து முன்கொண்டு செல்லப்பட்டிருந்த 44 சம்பவங்களுக்குரிய ரூபா 29,579,093 நட்டத்திற்காக காப்புறுதி இழப்பீட்டின் மூலமும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து உரிய நட்டப் பெறுமதி அறவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) மற்றும் நிதிப்பிரமாணம் 109(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் 11 சம்பவங்களுக்குரிய ரூபா 1,788,138 நட்டப் பெறுமதியை பதிவழிப்பதற்காக நிதிப்பிரமாணம் 104(4) இறுதி அறிக்கையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 109(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் மீதியாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்புக்கள் ஏற்பட்டு இருந்த திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் விவசாயப் பிரிவிற்குரிய 2013 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 ஆந் திகதி வரை ஏற்பட்டிருந்த 26 சம்பவங்களுக்குரிய ரூபா 3,765,406 தொகை ஆன நட்டத்திற்காக இறுதி அறிக்கை சமர்ப்பித்தல் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பிரிவுகளில் முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்ற 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இறுதி

மீதியாகக் காணப்பிக்கப்பட்ட 05 சந்தர்ப்பங்களுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 6,185,021 நட்டப் பெறுமதி 2025 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய பிரிவினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேட்டிற்குரிய படிவத்தின் பிரகாரம் நாளதுவரையாக்கப்படாது இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற 11 சம்பங்களுக்குரிய ரூபா 9,970,679 நட்டப் பெறுமதி இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்படாது இருந்ததுடன் அந்த பிரிவினால் இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த 05 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 15,120,182 நட்டப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2025 ஆம் ஆண்டின் ஏற்பட்டிருந்த 07 சம்பவங்களுக்குரிய நிதிப்பிரமாணம் 104 (3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை சம்பவம் ஏற்பட்ட உடன் அனுப்ப வேண்டியிருந்த போதிலும் விவசாயப் பிரிவினால் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நீர்ப்பாசன பிரிவில் பதிவழிக்கப்படாமல் முன்கொண்டு செல்லப்படுகின்ற வாகன விபத்து நட்டம் ரூபா 10,482,500 இனை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நட்டம் அல்லது நட்ட இழப்பு ஏற்பட்ட உடன் அதன் அளவு அதன் தொகை மற்றும் காரணம் குறித்துரைத்த ரீதியில் இனங்காண்பதற்கும் பொறுப்பு வாய்ந்த நபரை இனங்காண்பதற்காகவும் பரிசோதனை உடனடியாக நடாத்த வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 26 ஆந் திகதி வரையிலும் காணிப் பிரிவின் இலக்கம் ரீ-856 மற்றும் ஊயுழு-8946 என்ற வாகனங்களின் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட இரண்டு வாகனங்களுக்கும் மேலதிகமாக 64-3203 என்ற வாகனத்திற்கு 2025 மே 21 ஆந் திகதி மற்றும் 2025 யூன் 24 ஆம் திகதிகளில் விபத்து ஏற்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதிப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) காணி அமைச்சின் முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பயன்படுத்திய அரசிற்குச் சொந்தமான ளுரடிெ ஏநனழை ஊயஅநசய டீயவவநசல ஊாயசபநச என்ற பெயருடைய விடயம் கையளிக்கப்படாமையினால் அரசிற்கு ரூபா 93,750 நிதி நட்டம் ஏற்பட்டிரந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் உரிய சம்பவம் ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் உரிய நட்டத்தை பொறுப்பு வாய்ந்த நபரிடம் இருந்து அறவிடப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 4.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு பின்னர் பரீட்சிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சிற்கு 2024.07.24 ஆந் திகதி முதல் 2026.02.27 வரையான காலப் பகுதியில் விநியோகிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 முகாமைத்துவ நலிவுகள்**

(அ) 2016 ஏப்ரல் 08 ஆந் திகதி முதல் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை அதாவது 05 வருட கால எல்லைக்காக விவசாய அமைச்சிற்காக வாடகை அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றுடன் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் 2178 என்ற வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே, இலக்கம் 288 இல் அமைந்துள்ள ஹீது வுழுறுநுசு என்ற பெயருடைய கட்டிட வளாகம் வாடகையாளருக்கு மீண்டும் 2020 சனவரி 31 ஆந் திகதி கையளிக்கப்பட்ட போதும் அமைச்சினால் அந்த வாடகையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் மீள செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் உடன்படிக்கை முடிவடைந்து வாடகைச் சொத்துக்கள் கையளிக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் வாடகையாளர் அந்த செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பை வாடகைக்குப் பெற்றவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பிரகாரம் வாடகைக்கு வழங்கிய தரப்பினரால் சட்ட விரோதமாக இந்த பாதுகாப்பு வைப்பு நிறுத்தி வைக்கப்பட்டு இதுவரையில் விஞ்சியிருந்த காலம் 05 வருடங்கள் ஆகும்.

(ஆ) முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உரப் பிரிவிற்கு உரிய ரூபா 18,000,000 பெறுமதியான இலக்கம் முறு-8202 என்ற வாகனம் 2021 மார்ச் 21 ஆந் திகதி விபத்திற்காக ரூபா 7,500,000 காப்புறுதி இழப்பீடு செலுத்துவதற்கு காப்புறுதி நிறுவனம் இனங்கி அதன் பிரகாரம் வாகனத்தை பழுது பார்ப்பதற்கு 2022 திசெம்பர் 12 ஆந் திகதி உரிய கராஜ் இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 23 ஆந் திகதி ரூபா 5,625,000 தொகை வாகன பழுது பார்த்தல் நிறுவனத்திற்கு காப்புறுதி நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இந்த அறிக்கை திகதி வரையிலும் 03 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் உரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 125,574,546 மூலதன செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. அது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 11.67 சதவீதத்தால் அதிகரித்து இருந்த போதிலும் பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கையில் கவனத்தில் கொள்ளக் கூடிய அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் விவசாய தொழில் நுட்பவியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக

சேர்க்கப்பட்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கை முறையே 23 மற்றும் 36 ஆன குறைந்த எண்ணிக்கையினைக் கொண்டிருந்தது.

(ஈ) கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மட்டத்தில் பயிற்சி பாடநெறியினை நடாத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2017 யூலை மாதம் 18 ஆந் திகதிய இலக்கம் 17.ஃ.1456.ஃ.729.ஃ.017 என்ற அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் கிடைத்திருந்த போதும் நிறுவனத்தால் இதுவரை நடாத்தப்பட்ட சர்வதேச பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை 05 மாத்திரமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஒரு சர்வதேச பயிற்சிப் பாடநெறியும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மட்டத்தில் பயிற்சி நெறிகளை விளம்பரம் செய்வதற்கு உள்ள பிரதானமான ஊடகமாக நிறுவனத்தின் இணையதளத்தை பயன்படுத்துவதற்கு முடியுமாக இருந்தது. 2024 திசெம்பர் மாதம் ரூபா 168,275 செலவினம் ஒன்றை மேற்கொண்டு இணையதளம் நாளதுவரையாக்கப்பட்ட போதிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட விசேட பயற்சிப் பாடநெறிகள், அந்த பாடநெறிகளின் உள்ளடக்கம் (ஊழரசளந ஊழவெநவெள) நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் அதன் கூறுவிலைகள் தொடர்பான விரிவான தகவல்கள் எதுவும் வெளிநாட்டு மாணவர்களை கவரும் வகையில் பகிரங்கப்படுத்தல் ஒன்று இந்த இணையதளம் மூலம் காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.8 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் விடுதியினைச் சுற்றி பாதுகாப்பு வேலி ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் பெண்கள் விடுதியில் வேலி 200 மீற்றர் மற்றும் ஆண்கள் விடுதியின் வேலி 212 மீற்றர் நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2025 யூலை 28 ஆந் திகதி இந்த நிறுவனத்தின் ஆலோசனையாளருடன் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வேலியின் நீளத்தை அளவிடும் போது நிர்மாணிக்கப்படாத 55 மீற்றருக்காக ரூபா 529,627 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் விவசாயப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2,177 ஆக இருந்ததுடன் அதில் 93 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அதனிடையே 21 பதவிகள் சிரேஸ்ட நிலையில் பதவிகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. கால்நடை வளப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 566 ஆக இருந்ததுடன் அதில் 45 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. காணிப் பிரிவில் சிரேஸ்ட நிலையில் 05 பதவிகளும், மூன்றாம் நிலையில் 01 பதவியும், இரண்டாம் நிலையில் 26 பதவிகளும், ஆரம்ப நிலையல் 09 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) 2025 யூலை 14 ஆந் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழுவினால் 2023 இன் 09 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட காணிப் பிரிவின் உதவி செயலாளர் ஒருவர் தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஓடுஏஐஐஐ அத்தியாயத்தின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் காணி அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இனால் இந்த உத்தியோகத்தருக்காக இலங்கை நிர்வாக சேவையின் ஐ தரத்திற்கு பதவியுயர்வு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர் 2025 யூலை 14 ஆந் திகதி கைது செய்யப்பட்டதுடன் உயர் பதவி கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த அங்கீகாரமும் முடிவுறுத்தப்பட்டமையால் உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் மற்றும் சாரதி 2025 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் போக்குவரத்து பிரிவிற்கு கையளிக்குமாறு உதவி செயலாளர் (நிர்வாகம்) 2025.08.01 ஆந் திகதிய இலக்கம் 1.ஃ.16.ஃ.35.ஃ.101 என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆகஸ்ட் மாதத்தில் இந்த வாகனம் மற்றும் சாரதி போக்குவரத்து பிரிவிற்கு கையளிக்கப்படாமல் ஒதுக்கப்பட்ட வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

பீ.கே.எம்.பீ. நோனிஸ்
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக